Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 11

ஞாயிற்றுக்கிழமை
07 டிசெம்பர் 2025

கார்த்திகை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## வடக்கில் கனமழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, டிசெ. 7
நாடு முழுவதும் வடகிழக்கு பருவமழை படிப்படியாக வலுப்பெற்று வருகிறது. வடக்கு மாகாணத்திலும் கனமழைக்குச் சாத்தியங்கள் உள்ளன இவ்வாறு வளிமண்டலவியல்

»15

# வெள்ள நிவாரணத்தில் ஊழல் மோசடி இல்லை



### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 7**

**வெள்ளஇடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் 25ஆயிரம் ரூபா கொடுப்பனவில் எந்தவிதமான ஊழல்களும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறாது என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம்பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

»15

யாழ்ப்பாணம்

## இந்துக் கல்லூரியின் சிவலிங்கத்தை அதேநிலையில் பேணுமாறு உத்தரவு

### வேறிடத்துக்கு மாற்ற நீதிமன்று இடைக்காலத்தடை

யாழ்ப்பாணம், டிசெ. 7
யாழ். இந்துக் கல்லூரியில் தூக்கப்பட்ட சிவலிங்கத்தை அதே நிலையில் பேண வேண்டும் என்று உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞானலிங்கேச்சரர் திருக்கோயிலில் இருந்து வைக்கப்பட்டிருந்த சிவலிங்

»15

## 25,000 ரூபா கொடுப்பனவு எமக்குத் தேவையில்லை!

### வறியோருக்குக் கொடுக்குமாறு ஜே/123 மக்கள் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 7
வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட வீடுகளைத் தூய்மைப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு எமக்கு வேண்டாம் என்று ஜே/123 பிரிவு மக்கள்

»15

## கொடுப்பனவு பெறுபவர்களின் விவரம் காட்சிப்படுத்தப்படும்!

### கூறுகின்றார் யாழ். மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், டிசெ. 7
வீடுகளைத்தூய்மைப்படுத்தும் பணிகளுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறுவோரின் பெயர் விவரங்கள் காட்சிப்படுத்தப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

»15



## வன்னியில் மீண்டும் இந்திய இராணுவம்

கிளிநொச்சி, டிசெ. 7
இலங்கைக்கு வந்துள்ள இந்திய இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள பரந்தன் - முல்லைத்தீவு வீதியைச் சீரமைத்து வருகின்றனர்.

»15

## டிசெம்பர் 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்!

யாழ்ப்பாணம், டிசெ. 7
பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய குறைநிரப்புப் பிரேரணை மீதான நடவடிக்கைக்காக டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ள

»15

## சிறைச்சாலைக்கு அவதூறு யுவதிக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 7
சிறைச்சாலை திணைக்களம் தொடர்பில் அவதூறு ஏற்படுத்தி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பெண்ணுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் யாழ். சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று முறைப்பாடு வழங்கப்படுள்ளது.
புதுக்குடியி

»15

## அரசின் அலட்சியமே அழிவுக்குக் காரணம்

### கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 7
அரசாங்கம் அலட்சியப் போக்குடன் செயற்பட்டதால்தான் டித்வா புயலால் அழிவுகள் ஏற்பட்டன என்று முன்னாள் அமைச்சர் கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தி

»15




### சர்வதேச சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின்

## தலைவராக ஈழத்தமிழர் தவம் தம்பிப்பிள்ளை!

**யாழ்ப்பாணம், டிசெ. 7**
**அமெரிக்க சான்போட் மருத்துவக் கல்லூரியின் உலகப் புகழ்பெற்ற சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைப் பேராசிரியரும், மருத்துவ நிபுணருமான தவம் தம்பிப்பிள்ளை சர்வதேச சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.**

»15



# சஞ்சீவி

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4277 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 04 46 48 76 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1344 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 11 48 49 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | |
| ஆங்கில எழுத்து | |
| வெற்றி இலக்கங்கள் | |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2383 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கங்கள் | 09 13 46 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6035 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 5 7 8 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2065 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 03 29 37 76 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0151 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 35 37 43 |

# நிலநடுக்கங்களால் இலங்கையும் அதிரும்

## வானிலை ஆய்வாளர் பிரதீபராஜா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ.7**

**இலங்கையின் கரையோரப் பகுதியில் நிகழும் பெரிய அளவிலான ( 6.0 ரிக்டர் அளவுக்கு மேலான) நிலநடுக்கங்கள் இலங்கையைக் கடுமையாகப் பாதிக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டித்வா புயலின் பேரனர்த்தத்துடன் எங்களுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான அனர்த்தங்கள் தொடர்பாகவும் நாங்கள் விழிப்பாகவிருந்தால் நாம் எமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் தவிர்க்கலாம். ஜப்பான் போன்ற நாடுகளில் இத்தகைய முறைமையே பின்பற்றப் படுகின்றது.

சுனாமி நிகழும் வரை சுனாமியால் இலங்கைக்குப் பாதிப்புகள் இல்லை என்றே பலரும் கருதியிருந்தனர். 2004 சுனாமி நிகழ்ந்த பின்னரே அதனைப் பற்றி பலர் அறிந்துகொண்டனர். அவ்வாறில்லாமல் புவிநடுக்க நிகழ்வுகளுக்கான வாய்ப்புகளை நாம் கொண்டிருக்கின்றோம் எனும் விழிப்பும், புவிநடுக்க நிகழ்வின் பௌதிகச் செயன்முறை, சாத்தியமான பாதிப்புகள், மற்றும் பாதிப்புகளைக் குறைக்கும் வழிமுறைகளை இலங்கையர் அனைவரும் கட்டாயமாக அறிந்திருக்கவேண்டும். ஏனெனில், இலங்கையிலும், இலங்கையைச் சூழவும் அண்மித்த காலங்களில் பல சிறிய அளவிலான புவிநடுக்க நிகழ்வுகள் அதிகளவு பதிவாகிவருகின்றன. இலங்கை இந்தியக்கவசத்தகட்டில் அமைந்திருந்தாலும் இலங்கைக்குக் கீழே பல சிறிய கவசத்தகடுகள் உள்ளன. அவை நாள்தோறும் ஒருங்கல், விலகல் அமிழல் போன்ற பல செயற்பாடுகளுக்கு உள்ளாகின்றன. அவற்றின் விளைவே இந்தப் புவி நடுக்க நிகழ்வுகளின் அதிகரிப்பு. அதுமட்டுமல்லாது மத்திய மலைநாட்டில் போவத்தன்ன, காசல்றீ, ரந்தெனிகல, ரந்தெம்ப, கொத்மலை, லகசபானா, மேல் கொத்மலை, மொரகாகந்த, பொல்கொல்ல, விக்டோரியா, மஸ்கெலிய, போன்ற நீர்த்தேக்கக்கங்கள் அமைந்துள்ளன. அவற்றுக்கு அண்மித்து ஏற்படும் மிதமான ( ரிக்டர் அளவில் 5.0க்கு மேலாக) நிலநடுக்கங்கள்கூட இந்த நீர்த்தேக்கங்களைப் பாதிக்கும். இயற்கை அனர்த்தங்களை நாம் தவிர்க்கமுடியாது. ஆனால், பாதிப்புகளை நாம் குறைக்கலாம் - என்றுள்ளது. (ச-66)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0743 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 9 7 7 4 5 5 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3009 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 11 35 55 58 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 03 10 14 39 |
| வெற்றி வாரம் | 5170 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0839 |
| வெற்றி இலக்கம் | 19 28 48 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| | மேஷம் |
| வெற்றி இலக்கம் | 05 17 25 58 |
| சீட்டிழுப்பு வாரம் | 4721 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கம் | 54 60 66 68 |
| வெற்றி வாரம் | 2185 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 06.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 03 21 74 75 |
| வெற்றி வாரம் | 2835 |

### சுகாதார விதிமீறல்

## இரு உணவகங்களுக்கு 24,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், டிசெ.7

சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத இரு உணவகங்களின் உரிமையாளர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நெல்லியடி நகரப்பகுதியிலுள்ள உணவகங்கள் மீது அண்மையில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

இதன்போது இரு உணவகங்களிலும் பணியாளர்கள் மருத்துவச்சான்றிதழ் இன்றியும், மேலங்கி, தலையுறை, முகக்கவசம், கையுறை ஆகியவை இன்றியும் பணியாற்றி வந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் குறித்த உணவகங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரிமையாளர்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் இரு குற்றங்களுக்காக தலா 6 ஆயிரம் ரூபா வீதம் 12 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ச-41-9)

## வரி செலுத்துவதற்கு காலக்கெடு நீடிப்பு!

கொழும்பு, டிசெ.7

2024/2025 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி வருமானத்தை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை உள்நாட்டு வருவாய்த் துறை டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடித்துள்ளது. 'டித்வா' சூறாவளியின் தாக்கம் மற்றும் இலங்கையின் பல பகுதிகளைப் பாதித்த தீவிர வானிலை காரணமாக காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-அ)

## கோண்டாவிலில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்போது அதிகரித்துள்ள குருதித் தேவையைக் கருத்திற்கொண்டு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரை கோண்டாவில் குட்டிச்சுட்டி முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை வழங்கும் அனைவருக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (66)

## வளவாளர்களிடம் விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.7

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சின்கீழ் செயற்படும், பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்துக்கு 2026ஆம் ஆண்டுக்குரிய வளவாளர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கர்நாடக இசை, சிங்களம் வயலின், சித்திரம், பரதநாட்டியம், மிருதங்கம், வீணை ஆகியவற்றைப் பயிற்றுவிக்கக்கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்துக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். தயாரிக்கும் விண்ணப்பத்தில் பெயர், முகவரி, பிறந்த திகதி, கிராம அலுவலர் பிரிவு, தொலைபேசி இலக்கம் துறைசார்ந்த தகைமை உள்ளிட்டவற்றை இணைத்து, அத்தாட்சிப் படுத்தும் விவரங்களுடன் விண்ணப்பங்களை நாளை திங்கட்கிழமைக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பிரதேச செயலர், பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பமுடியும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மறு அறிவித்தல்வரை மாடு, ஆடு இறைச்சி விற்கத் தடை

மன்னார், டிசெ.7

**மன்னார் மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை ஆடு மற்றும் மாடு இறைச்சி விற்பனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டப் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.**

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

உயிரிழந்த ஆடு, மாடுகளை இறைச்சியாக்கி மன்னார் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் மிருக மருத்துவ அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக கடந்த புதன்கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆடு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உத்தரவை மீறி ஆடு மற்றும் மாடு இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மறு அறிவித்தல் கிடைக்கும்வரை பொதுமக்கள் ஆடு மற்றும் மாட்டு இறைச்சிகளைக் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-56)



# மன்னார் களநிலைவரம் ஆளுநர் நேரில் ஆராய்வு

மன்னார், டிசெ.7

'டித்வா' புயலின் தாக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேதநிலைவரங்களை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மன்னார் மாவட்டத்துக்குக் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை ஆராய்ந்தார்.

இதன்போது ஆளுநர் நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அருகம்குன்று, மடுக்கரை உள்ளிட்ட அதிகளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மக்களின் நிலை குறித்து நேரில் அறிந்து கொண்டார். வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகள், குடிதண்ணீர் மற்றும் மின்சாரம் தொடர்பான சிக்கல்கள் உள்ளிட்ட விடயங்கள் அவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன. (ச-56)



# வெள்ளத்தில் இறந்து ஒதுங்கிய மாடுகள் கடற்கரையில் புதைப்பு

மன்னார், டிசெ.7

மன்னார் சௌத்பார் கடற்கரையில் கரையொதுங்கிய ஒரு தொகை மாடுகள் மன்னார் நகர சபையால் மீட்கப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு தொகை மாடுகள் கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அவை கரையொதுங்கியுள்ளன.

அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசியதை அடுத்து மன்னார் நகரசபைக்கு அறிவிக்கப்பட்டது. நகரசபைப் பணியாளர்களின் உதவியுடன் மாடுகள் கடற்கரையில் புதைக்கப்பட்டன. (எ-56)

# ஏழாலையில் வெள்ளப் பாதிப்பு 100 குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழில் தொடர் மழையால் ஏழாலையில் ஜே/206 மற்றும் ஜே/203 ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளிலும் 100 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் அவர்கள் பாதுகாப்புக்காக நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

ஏழாலை ஏழு கோவில்குளம் பெருக்கெடுத்தமையால் இரண்டு கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. ஜே/206 கிராம அலுவலர் பிரிவில் 65 குடும்பங்களும், ஜே/203 கிராம அலுவலர் பிரிவில் 35 குடும்பங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கிராமமக்களும் தொடர்ச்சியான மழை பெய்யும் காலங்களில் வெள்ள இடரை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏழு கோவில் குளத்திலிருந்து கந்தரோடைக் குளத்துக்குச் செல்லும் வெள்ள வாய்க்கால்கள் சீரின்மை, புனரமைப்பின்போது வீதிகள் உயர்த்தப்பட்டமை, கொங்கிறீட் வீதிகள் போடப்பட்டமை உள்ளிட்ட காரணங்களால் வெள்ளம் வெளியேற முடியாமல் கிராமங்களுக்குள் தேங்குகின்றது. இரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் அன்றாடக் கூலித் தொழிலாளிகள், விவசாயிகளே அதிகம் வசித்து வருகின்றனர். இதனால் பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். வெள்ளத்தால் விவசாய நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எமக்குப் போதிய நிவாரணங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-66)



# கோப்பாய் மருத்துவமனையில் நடமாடும் மருத்துவ சேவைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.7

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கான நடமாடும் மருத்துவ சேவை கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது. இங்கு தங்கியுள்ள மக்கள் காய்ச்சல், தடிமன், தலையிடி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. (க-17)



# வட மாகாணப் பொதுச்சேவைக்கு 30 உத்தியோகத்தர்கள் இணைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

தரம் III க்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை 2021(23) மூலம் தெரிவு செய்யப்பட்ட, கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் 30 பேர் வடக்கு மாகாண பொதுச்சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நாளை திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாணத்தின் மாகாண மற்றும் வலய கல்விப்பணிமனைகளில் தமது நிலைப்படுத்தல்களை பொறுப்பேற்கவுள்ளனர். வே.விமலன் (உடற்கல்வி) வவுனியா தெற்கு, யோ.விமலன் (உடற்கல்வி) முல்லைத்தீவு, த. புஸ்பரட்ணம் (உடற்கல்வி) துணுக்காய், செ. கீதகன் (திட்டமிடல்) மன்னார், சு. தனரூபன் (திட்டமிடல்) மடு, வ. கிருஷ்ணராசா (திட்டமிடல்) முல்லைத்தீவு, திருமதி து. சகானா (திட்டமிடல்) துணுக்காய், திருமதி ப. புவி (ஆங்கிலம்) கிளிநொச்சி தெற்கு, ச. கிருசாந்தன் (ஆங்கிலம்) மடு, ஜ.கதீஷ்கர் (அழகியல்) மடு, சி.சுதாகரன் (விசேட கல்வி) வவுனியா தெற்கு, திருமதி க. அனுசுயா (விசேட கல்வி) கிளிநொச்சி வடக்கு, து. ஜீவானந்தம் (தமிழ்) கிளிநொச்சி தெற்கு, திருமதி ச. தமிழ்செல்வி (தமிழ்) தீவகம், திருமதி வ. வினோஜா (தமிழ்) வடமராட்சி, திருமதி கே. சிவானி (தமிழ்) கிளிநொச்சி வடக்கு, திருமதி சா. சிவரூபி (திட்டமிடல்) வவுனியா வடக்கு, ந. பிரதாஸ் (உடற்கல்வி) மன்னார், த. உதயராஜன் (விசேட கல்வி) மன்னார், ஜே. லெபோன் சுதன் (கிறிஸ்தவம்) வடமாகாண திணைக்களம், திருமதி சு. யோகினி (சைவசமயம்) வடமாகாண திணைக்களம், திருமதி ஜே. றொபினா (தமிழ்) யாழ்ப்பாணம், பொ. யசிந்தன் (கணிதம்) வடமாகாண திணைக்களம், பொ. நடேசலிங்கம் (வரலாறு) வடமாகாணதிணைக்களம், திருமதி ர. யாழினி (உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்) வவுனியா தெற்கு, திருமதி ப. கவிதரா (பொது) வவுனியா வடக்கு, த. முகுந்தன் (வர்த்தகம்) வவுனியா வடக்கு, சு. புஸ்பரங்கன் (விஞ்ஞானம்) மன்னார், நா. பிரியந்தன் (தகவல் தொழில்நுட்பம்) முல்லைத்தீவு, திருமதி ஷியாமலி ஹேரத் (சிங்களம்) வவுனியா தெற்கு ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாரணப்பணிகளில்

# தேவைகளைக் கண்டறிந்து உதவிகளைப் பகிருங்கள்!

## ஆளுநர் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், டிசெ.7

**அனைவரும் ஒரே வகையான உதவிகளை வழங்குவது மக்களின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யாது. மாவட்டச் செயலகங்கள் ஊடாகத் தேவைகள் கண்டறியப்பட்டு அதற்கேற்ப உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.**

அதற்கேற்ப மாவட்டச் செயலகங்கள் ஊடாகத் தேவைகள் கண்டறியப்பட்டு உதவிகளைப் பகிர்ந்தளியுங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புகள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான அவசரக்கலந்துரையாடல்கடந்தசெவ்வாய்க்கிழமை யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களுக்கு உதவுவதற்கு உள்ளூர் மற்றும் புலம்பெயர் உறவுகள் ஆர்வத்துடன் முன்வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது. எனினும், இந்த உதவி கள் பயனாளிகளைச் சரியான முறையில் சென்றடைவதையும், மோசடிகள் இடம்பெறாதிருப்பதையும் உறுதிப்படுத்த அந்தந்த மாவட்டச் செயலர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இடர் முகாமைத்துவக் குழுக்களைத் தொடர்புகொள்ளுங்கள். பல தரப்பினரும் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளனர். இருப்பினும், அனைவரும் ஒரே வகையான உதவிகளை வழங்குவது மக்களின் முழுமையான தேவையைப் பூர்த்திசெய்யாது. மாவட்டச் செயலகங்கள் ஊடாகத் தேவைகள் கண்டறியப்பட்டு அதற்கேற்ப உதவிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். சில இடைத்தரகர்கள் அல்லது குழுக்கள் உதவிகளை வழங்குவதாகக் கூறி வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் நிதியைப் பெற்றுக் கொண்டு பயனாளிகளுக்குப் பெயரளவில் மட்டும் சிறிய உதவிகளை வழங்கிவிட்டுப் ஒளிப்படங்களை அனுப்புவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறான மோசடிகளைத் தடுக்க நன்கொடையாளர்கள் மாவட்டச் செயலகத்தின் தேவைப்பட்டியலைப் பெற்றுக்கொண்டு உதவிகளை வழங்குவதே சிறந்தது.

நிவாரணப்பணிகளை ஒருங்கிணைக்க விரும்புவோர் பின்வரும் யாழ்.மாவட்டச் செயலகப் பதவி நிலை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சுரேந்திரநாதன் (யாழ்ப்பாணம்) 0774840199, அஜித்தா (கிளிநொச்சி) 0775650671, பிரதீப் (மன்னார்) 0719905324, கமலதாசன்(வவுனியா) 0776138369 ரஜினிகாந்த் (முல்லைத்தீவு) 0773707720 அல்லது கோகுலராஜ் 0773957886 (ச-66)

## சீனப் பெண்கள் சம்மேளனத்தால் இடர் பாதிப்பு நிவாரணங்கள்!




கொழும்பு,டிசெ.7

இலங்கையில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென அனைத்து சீனப் பெண்கள் சம்மேளனம் சுமார் 43 மில்லியன் ரூபா பெறுமதியான பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சுகாதாரப் பொருள்களை நன்கொடையாகக் கையளித்துள்ளது. இவை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் முன்முயற்சியில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் விநியோகிக்கப்படவுள்ளன. (ச-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் கார்த்திகைப் பரணி ருணுரோக விமோசனப் பிரதோஷ விரதச் சிறப்பு வழிபாடு கடந்தசெவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

## கொக்குத்தொடுவாய் வடக்கில் நிலக்கடலைச் செய்கை அழிவு



முல்லைத்தீவு,டிசெ.7

கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் 36க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 170 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலக்கடலைச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயம் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சந்தித்தார். குறித்த பகுதியில் மழைக்காலங்களில் தொடர்ச்சியாக இவ்வாறான பாதிப்புள் ஏற்படுகின்றன. விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே இதற்கு முற்றுப்புள்ளிவைக்கும் பொருட்டு உரியவகையில் வடிகாலமைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர். மக்களின் கோரிக்கைக்கு அமைவாக உரிய வகையில் வடிகாலமைப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மக்களிடம் தெரிவித்தார். (க-246)

## எலிக்காய்ச்சல் அபாயம் மக்களுக்கு விழிப்பூட்டல்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது எலிக்காய்ச்சல் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அதுதொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடு பருத்தித்துறையில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வூட்டும் செயற்பாடு பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஷ் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. கிராமங்கள்தோறும் சென்று விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன், அதுதொடர்பான துண்டுப் பிரசுரங்களும், எலிக்காய்ச்சலால் ஆபத்துக்குள்ளாகும் என எதிர்பார்க்கப்பட்ட குழுவினருக்கு முற்பாதுகாப்புக்கான தடுப்பு மருந்தும் விநியோகப்பட்டன. (க-100)



## கிளிநொச்சிப் பொலிஸாரால் 30 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி,டிசெ.7

கிளிநொச்சிப் பொலிஸாரின் ஏற்பாட்டில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு, உலருணவுப்பொதிகள் பொலிஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முகமட் சுல்தான் நஜீம் தலைமையில், கிளிநொச்சி-முல்லைத்தீவு பிரதிப்பொலிஸ்மா அதிபர் எ.சந்திரசேன, கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த சில்வா, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பொதிகளை வழங்கினர்.

உதயநகர் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கே இந்த உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கால்நடைகள் அழிவு தரவுகள் சேகரிப்பு ஆரம்பம்!


யாழ்ப்பாணம், டிசெ.7

வடக்கு மாகாணத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் தொடர்பான விவரங்களைப் பதிவுசெய்வதற்கும், தப்பியுள்ள கால்நடைகளுக்குத் தேவையான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்கும் விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகப் பொதுமக்கள் தொடர்புகொள்வதற்கென மாவட்ட ரீதியான தொலைபேசி இலக்கங்களை வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி எஸ்.வசீகரன் நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டுள்ளார்.

அதன்படி கால்நடை வளர்ப்பாளர்கள், வவுனியா மாவட்டம்: நிர்மலன் பெர்னாண்டோ - 0771250461, கிளிநொச்சி மாவட்டம்: எம்.ராகவன் - 0776257977, யாழ்ப்பாணம் மாவட்டம் வித்தியா நமசிவாயம் - 0775374464, முல்லைத்தீவு மாவட்டம்: எஸ்.தமிழ்ச்செல்வன் - 0773580720, மன்னார் மாவட்டம்: ரேமன் - 0766499107 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான சிகிச்சைகளைத் துரிதப்படுத்தவும், இழப்பீட்டு மதிப்பீடுகள் மற்றும் தரவு சேகரிப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்தவும் இந்தத் தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார். (ச-66-113)



## நானாட்டான் பிரதேசத்தில் விசேட நடமாடும் மருத்துவ சேவை

மன்னார், டிசெ.7

நாட்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர் காரணமாகப் பாதிக்கப்பட்டு நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு முருங்கன் ஆதார மருத்துவமனையின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ சேவைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் மன்னார், மாந்தை மேற்கு, மடு, நானாட்டான் மற்றும் முசலி ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)

## அவசரகாலச்சட்டம் மூலம் மக்களை ஒடுக்க முயற்சி

### கபீர் ஹாசீம் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.7

பேரிடரைச் சமாளிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம், மக்களை ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. இது அரச பயங்கரவாதமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அனர்த்த நிலைமையை எதிர்கொள்வதற்கு அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது மக்களை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை அவசரகால சட்டத்தின்கீழ் கைதுசெய்யுமாறு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கூறியுள்ளார். இது அரச பயங்கரவாதமாகும். சமூகஊடகங்களில் உள்ளவர்கள் களத்துக்கு இறங்கி தற்போது சேவையாற்றுகின்றனர். இவர்களை ஏன் ஒடுக்குவதற்கு முற்படவேண்டும்?

மக்களுக்காகவே அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டதெனில் அதனை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முற்படக்கூடாது. அனர்த்த நிலைமையை வைத்து நாம் அரசியல் நடத்தவில்லை. ஆனால் அரசாங்கம்தான் அவ்வாறு செயற்படுகின்றது.

அதேவேளை, காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறி இருந்தது. ஆனால் அதன்பின்னரான நடவடிக்கைகள் தொடர்பில் அரசியல் தலைமைத்துவம் முறையாக இயங்கவில்லை-என்றார். (எ-44)

## போலித் தகவல்களில் அரசியல் செய்யாதீர்

### அமைச்சர் ஆனந்த விஜேபால காட்டம்

கொழும்பு, டிசெ.7

நெருக்கடியான சூழ்நிலையில் போலித்தகவல்களைப் பரப்பும் சந்தர்ப்பவாத அரசியலை எதிர்க்கட்சிகள் கைவிடவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

போலித் தகவல்களைப் பரப்பாமல் இருப்பதுதான் தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் செய்யும் சிறந்த சேவையாக இருக்கும். அதேபோல சந்தர்ப்பவாத அரசியலைக் கைவிட்டுவிட்டு நாட்டை மீட்க ஒன்றுபடவேண்டும். அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களை அங்கு குடியமர்த்தாமல் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச-44)



## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 61ஆவது நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.7

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 61ஆவது நினைவுதின நிகழ்வு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் ப.கேசவதாசன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் அவரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளையின் பிரதி முகாமையாளர் தெ.ஹர்சன் நினைவுப்பேருரையை ஆற்றினார். நிகழ்வில் சிறப்புரைகள், கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன. இதேவேளை நிகழ்வின் தொடக்கத்தில் சீரற்ற காலநிலையால் உயிரிழந்த உறவுகளுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-17-159)



## பேரிடரில் உயிரிழந்தோருக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, டிசெ.7

வெள்ளப்பேரிடரால் உயிரிழந்த பொதுமக்களுக்கு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பூந்தோட்டம் வர்த்தகர் சங்கம், சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பு, அற்புதமான இதயம் அமைப்பு ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்திருந்தன. நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரணப் பொருள்களும் சேகரிக்கப்பட்டன. (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.12.2025 ஞாயிற்றுக்கிழமை



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விஷயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன் றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**கடகம்:** தேவையான பணம் இருந்தாலும் திடீர்செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஒரு சிலருக்கு வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளையசகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் -மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். தாயாரின் உடல்நலனில் கவனம்தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**தனுசு:** தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். பிள்ளைகளின் பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வீர்கள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட அவப்பெயர் நீங்கும்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# இலட்சார்ச்சனை

இணுவில் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 20ஆம் திகதி சனிக்கிழமை நிறைவுபெறவுள்ளது. தினமும் காலை, மாலை அபிஷேகம், பூஜை, அர்ச்சனை, ஹோமம், இசை ஆராதனை என்பன இடம்பெறும். 18ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும், 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகமும், காலை 7 மணிக்கு வசந்த மண்டப் பூஜையும், காலை 9 மணிக்குத் தேர்ப்பவனியும், மாலை 4.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெறும். 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு சங்கல்ப்பமும், காலை 10.30 மணிக்கு 108 கலச அபிஷேகமும், காலை 11 மணிக்கு ஆன்மிகவுரையும், மதியம் 12 மணிக்கு சந்தன அலங்காரப் பூஜையும், பிரசாதம் வழங்கலும் இடம்பெறும். (எ-41)


## சாரதி தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனத்திற்கு பின்வரும் பணி வெற்றிடத்திற்கு வேலையாட்கள் தேவை.

1. சாரதி (Driver)

தகுதியுடையவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 077 120 9998**

(CR 46656 B) A


## நூலகர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு நூலகர் மற்றும் தரவுப் பேணுநர் பதவி நிலைகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 120 9998**

(CR 46656 B) A

# எலிக்காய்ச்சலில் இருந்து எம்மைப் பாதுகாப்போம்!


■ **திருமதி யானுதி தர்சன்**
விரிவுரையாளர்,
தாதியியல் பிரிவு,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.


கடந்த சில நாள்களாக இடைவிடாது பொழிந்த மழையின் விளைவாக உருவான வெள்ளப்பெருக்கினால் வயல்கள், வீடுகள், சாலைகள் அனைத்தும் மூழ்கி, மக்களின் வாழ்வில் பேரழிவையும் பெரும் சிரமங்களையும் ஏற்படுத்தி இருந்தன. ஆனால் வெளிப்படையாகக் காணப்படும் சேதங்களை மட்டும் அல்லாமல், வெள்ளம் தொற்றுநோய்களைப் பரப்பும் ஒரு மறைமுக அபாயத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

குறிப்பாக எலிக்காய்ச்சல் (லெப்டோஸ்பைரோசிஸ்) எனப்படும் நோய் கண்களுக்குப் புலப்படாமல் வெள்ள நீரில் பதுங்கிச் சென்று, அறியாத பொதுமக்களைத் தாக்கத் தயங்காத ஒரு உயிர்க்கொல்லி ஆபத்தாகும். இயற்கைப் பேரிடர் ஏற்படுத்திய குழப்பத்தை சமாளிக்கப் போராடும் மக்களுக்கு, இந்தப் புலப்படாத எதிரி மேலும் ஒரு சவாலாக மாறியுள்ளது.

எலிக்காய்ச்சல் என்பது 'லெப்டோஸ்பைரா'எனும் பக்றீறியாவால் ஏற்படுகின்றது. நோயினால் பாதிக்கப்பட்ட எலியிலிருந்தும் மற்றும் மாடு, எருமை, ஆடு, பன்றி, குதிரை, நாய் போன்ற மிருகங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் சிறுநீர் மூலம் இந்த பக்றீறியா வெளிச்சூழலுடன் சேர்கின்றது.

வயலிலுள்ள நீர் தேங்கும் குழிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் இந்த பக்றீறியா தங்கியிருக்கும். கனதியான வெள்ள நிலைமைகளின்போது தொற்றுக்குள்ளான சிறுநீர் வெள்ளநீருடன் கலப்பதனால் எலிக்காய்ச்சல் மிக வேகமாகப் பரவுகின்றது.

தோலில் உள்ள வெட்டுக்காயங்கள் அல்லது சிராய்வுகள் ஊடாக அல்லது மூக்கு, வாய், கண்களில் உள்ள மென் சவ்வுகள் ஊடாக உடம்பினுள் பக்றீறியாக்கள் உட்செல்கின்றன. பக்றீறியா தேங்கியுள்ள நீரை மனிதர்கள் அருந்தும் போதும், குளிக்கும்போதும், நடமாடும் போதும் அந்த பக்றீறியா மனித உடலுக்குள் செல்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், மீட்புப் பணியாளர்கள், வெள்ள நிவாரணப் பணியாளர்கள் ஆகியோருக்கு இந்த் நோய் பரவக்கூடிய சாத்தியக்கூறு அதிகமாக உள்ளது.

இந்த நோயானது மனிதரில் இருந்து மனிதருக்குத் தொற்றுவதில்லை.

தொற்று ஏற்பட்டு சராசரியாக 5-14 நாட்களின் பின்னரே நோய் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும் இருப்பினும் நோய் அறிகுறிகள் தென்பட 2-30 நாள்கள் வரை எடுக்கலாம்.

**எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள்**

அதிகமான காய்ச்சல்
கடுமையான தசை வலி
கண் சிவந்து காணப்படுதல்

மேற்கூறிய பிரதான நோய் அறிகுறிகளுடன்.
வாந்தி
தலையிடி
உடல் பலவீனம்
சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல்
சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல்

இந்த அறிகுறிகள் ஆபத்தான சிக்கல்களின் ஆரம்ப கட்டங்களாக இருக்கலாம்.

ஆனால், சில நோயாளிகளுக்கு எந்த ஒரு குணம் குறியும் தென்படாது. எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால், உடனடியாகத் தகுதியான மருத்துவநிபுணரிடம் மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்காவிட்டால், இந்நோயானது சிறுநீரகம், இதயம், மற்றும் மூளை போன்ற உறுப்புகளைப் பாதித்து மரணத்தையும் ஏற்படுத்தும். எலிக்காய்ச்சலானது பக்றீறியாவால் ஏற்படுவதால் அதனைக் குணப்படுத்துவதற்கு நுண்ணுயிர்க்கொல்லி (அன்ரிபயற்றிக்) சிகிச்சை நடைமுறையில் உள்ளது. உரியகாலத்தில் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோயாளிகள் இந்த நோயில் இருந்து முற்றாகக் குணமடையமுடியும்.

**பாதுகாக்கும் வழிமுறைகள்**

தேவையில்லாமல் நீர் தேங்கியிருக்கும் இடங்களுக்கோ அல்லது சேற்று நிலங்களுக்கோ போவதைத் தவிர்க்கவும். மற்றும் இவ்வாறான இடங்களில் குளிப்பதையோ அல்லது கழுவுவதையோ தவிர்க்கவும்.

தோலில் ஏதேனும் சிராய்வுகள், அல்லது காயங்கள் இருந்தால் (பாதங்களில் அல்லது கை விரல்களில்) அதனை நீர் உட்புகாத வகையில் கட்டிக்கொள்ளவேண்டும். கை, கால், முகத்துக்கு பாதுகாப்பு உறைகளை (சப்பாத்து, கையுறை, முகக்கவசம்) அணிந்து கொள்ளுங்கள். தொற்றுக்குள்ளான இடங்களுக்குச் சென்று வந்த பிறகு கை, கால் மற்றும் முகத்தை நன்கு சவர்க்காரமிட்டு கழுவவும் நன்றாகக் கொதித்து ஆறிய நீரை பருகவும் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாகப்பேணவும். முற்பாதுகாப்புக்கான நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளைச் சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

**தரவுகள்:**
தொற்று நோய் விஞ்ஞான பகுதி, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வெற்றியாளர்கள் கடின உழைப்பை வெற்றியாக மாற்றக்கூடியவர்கள், தோல்வியடைந்தவர்களோ அதைத் தண்டனையாகப் பார்ப்பவர்கள்.

– லூ ஹோல்ட்ச்–


# அர்த்தமுள்ள நத்தார்...!

நத்தார் பெருவிழாவில் ஆடம்பரம் தவிர்த்து, தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தி - அதை இல்லாதோருடன் பகிருமாறு அழைப்பு விடுத்துள்ளது கத்தோலிக்க திருச்சபை. டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுகளைத் தொடர்ந்து, இத்தகைய கருத்தை கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏற்கனவே முன்வைத்திருந்தநிலையில், யாழ்ப்பாணம் மறைமாவட்டம் தற்போது அதை மீள வலியுறுத்தியுள்ளது. மன்னார் மறைமாவட்டத்தின் நிலைப்பாடும் அநேகமாக அதுவாகவே இருக்கும். பண்டிகைகளையும் கொண்டாட்டங்களையும் பெரிதாகக் கண்டுகொள்ளாமல் -சம்பிரதாயபூர்வ நாளாகக் கடந்துபோகும் வெற்று மனோநிலைக்குத் தமிழர் தாயகம் தள்ளப்பட்டு ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்துவிட்டன. இந்த நீண்ட -நெடிய துன்பியல்களின் மற்றொரு அம்சமாகவே டித்வாவும் அது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளும் வந்தமைந்துள்ளன என்றால் மிகையில்லை.

இறைமகனான இயேசுக் கிறிஸ்து இவ்வுலகுக்குத் தம்மை வெளிப்படுத்திய விதம் முழுவதும் வேறுபட்டது. அது முழுக்கமுழுக்க அவரின் தெய்வீகத் தன்மையை பிரதிபலித்தது. இயேசுக்கிறிஸ்து நினைத்திருந்தால் மாடமாளிகைகளிலும் கோபுரங்களிலும் பிறந்திருந்திருக்கலாம். பல்லாயிரம் வானதூதர்கள் புடைசூழ ஓர் இராஜனைப்போன்று அவர் மண்ணுலகில் அவதரித்திருக்கலாம். ஆனால், அவர் தேடிக்கொண்டது ஒரு மாட்டுத்தொழுவம். ஆடு, மாடுகளுக்கு உணவளிக்கும் தீவனத்தொட்டியில்தான் அவர் வந்துதித்தார். பிறப்பில் ஏழ்மையையும், வாழ்வில் அன்பையும் பகிர்தலையும்தான் இயேசுக்கிறிஸ்து வெளிப்படுத்தினார். இயேசுக் கிறிஸ்து கற்பித்துச்சென்ற 'ஏழ்மை - அன்பு -பகிர்தல்' இம்மூன்றையும் இன்று கட்டாயமாகப் பிரதிபலிக்க வேண்டியவர்களாக இலங்கையர்களாகிய நாம் இருக்கின்றோம்.

ஏழ்மையைச் சூடிக்கொண்டு, இல்லாதோருடன் பகிர்ந்துகொள்ளவேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. அதுதான், இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய அந்தத் தீவனத்தொட்டிக்குச் செல்லும் உண்மையான அழைப்பாகும். வாழ்வதற்குப் போராடிக்கொண்டிருக்கும் ஏழைகளில் இயேசுவைத் தேடுவதுதான் அர்த்தமுள்ள நத்தாராகவும் அமையும். 'ஏழ்மை - அன்பு- பகிர்தல்' இம்மூன்றின் பாற்பட்டு எவரெல்லாம் நத்தாரைக் கொண்டாடுகின்றார்களோ அவரெல்லாம் இன்னொரு இயேசுவே. அத்துடன், இந்த 'ஒறுத்தல்' 'பகிர்தல்' எல்லாம் கிறிஸ்தவர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் மட்டும் பொருந்திப்போகும் விடயமல்ல. நத்தார் பண்டிகை நிறைவடைந்ததும் பொங்கல் பண்டிகைக்கான ஏற்பாடுகள் ஆரம்பித்துவிடும். இம்முறை பண்டிகைக் காலங்களில் எல்லாம் நாங்கள் பகிர்தலைப் பிரதானப்படுத்தவேண்டும்.

*டித்வா புயலால் 4 ஆயிரத்து 164 வீடுகள் முழுமையாகவும் 67 ஆயிரத்து 505 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிட்டுள்ளது இடர் முகாமைத்துவ மத்திய நிலையம். 20 இலட்சத்து 82 ஆயிரத்து 195 பேர் வெள்ளப் பாதிப்பு, இடம்பெயர்வு மற்றும் சொத்துச் சேதங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எம்மால் எவ்வளவுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு பகிர்வதே அத்தனை உறவுகளையும் கொஞ்சமேனும் மீட்டு வருவதற்கு வாய்ப்புகளை வழங்கும்.*




## சம்பளமற்ற 5 வருட விடுமுறை அரச ஊழியர்களுக்கு நிறுத்தம்

கொழும்பு, டிசெ.7

**அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைகளை அங்கீகரிப்பதை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதற்கு பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

நவம்பர் மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக, அதுதொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டு பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக்க பண்டார அறிவித்துள்ளார். அதற்கமைய புதிய விடுமுறை விண்ணப்பங்கள் அல்லது விடுமுறை நீடிப்பு விண்ணப்பங்கள் பொறுப்பேற்பு உடன் நடைமுறைக்குவரும்வகையில் நிறுத்தப்படவுள்ளது. அதேவேளை தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு விடுமுறையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு, அங்கீகரிக்கப்பட்டுள்ள கால எல்லைக்கு அமைவாக மாத்திரம் அந்த விடுமுறையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிரேஷ்டத்துவம் மற்றும் ஓய்வூதியத்துக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்சம் 5 வருடங்களுக்கு உட்பட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கி, 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி முதல் அமுலாகும்வகையில் பொது நிர்வாக சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தகக்கது. (ச-இ)



## 30 இலட்சம் வரை கோழிகள் அழிவு!

கொழும்பு, டிசெ.7

இலங்கையைப் பாதித்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக இலங்கை முழுவதும் 30 இலட்சம் முட்டையிடும் கோழிகள் உயிரிழந்துள்ளன. இதனால் முட்டைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதிகளில், முட்டை பற்றாக்குறை ஏற்பட்டால், அது பண்டிகைக் காலத்தைப்பாதிக்கலாம். எனவே, தற்போதைய நிலைமையைக்கவனமாக ஆய்வுசெய்து, முட்டைக்குப் பற்றாக்குறைக்கு மாற்றுத் தீர்வுகளைக் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மாலைதீவால் ரின்மீன்கள்

கொழும்பு, டிசெ.7

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான வலுவான நட்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பைப் பிரதிபலிக்கும் வகையில், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக மாலைதீவினால் 25,000 ரின்மீன் பெட்டிகள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. 14 கொள்கலன்களில் அடைக்கப்பட்ட இந்த ரின்மீன் தொகை, நேற்று இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. (ச-இ)

## தமிழக அரசால் நிவாரணங்கள்

சென்னை, டிசெ.7

தமிழக அரசு சார்பில் இலங்கைக்கு சென்னை மற்றும் தூத்துக்குடித் துறைமுகங்களில் இருந்து கப்பல் மூலம் 950 தொன் நிவாரணப் பொருள்கள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## 2,000 மலைகளில் அறிவியல் ஆய்வு

கொழும்பு, டிசெ.7

மத்திய சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள சுமார் 2,000 மலைகளில் விரிவான அறிவியல் ஆய்வு நடத்தப்பட்டு அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் மூத்த மாணவர்களையும், நீர்வள வாரியம் உள்ளிட்ட பிற நிறுவனங்களின் நிபுணர்களையும் இந்தப் பணிக்காக ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
திங்கட்கிழமை - கார்த்திகை 22
08.12.2025
சுபநேரம் : 12.17 - 01.47
ராகுகாலம் : 07.47 - 09.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 10 . 1973



மறைவு 04 . 12 . 2025

## மகேஸ்வரன் மதீதரன் (மதீன்)

(உரிமையாளர் - Media Electro Mart, Mahesh & Son - Chavakachcheri)

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் மதீதரன் (மதீன்) அவர்கள் கடந்த (04.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரன் (Jaffna Elecricals) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - வனிதா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவதாரணியின் அன்புக் கணவரும், அட்சயன், அஸ்வித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மதிசன், யசோதினி (USA), சாமினி (UK), முகுந்தன் (Jaffna Elecricals) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமுதினி (India), வித்தியசங்கர் (USA), நிசாந்தன் (UK), வேதகி (Colombo), சிவதர்மினி (UK), சிவகாமி (UK) ஆகியோரின் மைத்துனரும், அபூர்வன் (UK), ஆதித்தியா, அபிநயன், ஆதவி (India) ஆகியோரின் சிறியதந்தையும், அபிராம், ஆதன்யா (Colombo) ஆகியோரின் பெரியதந்தையும், சௌமியா, துளசிந்தன் (USA), அயிறா, நிலன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிதொடக்கம் அஞ்சலிக்காக மகிந்த மலர்சாலை கல்கிசை (Mount Lavinia) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பிற்பகல் 01.00 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: தாய்
சகோதரர்கள் - 077 773 8715
மனைவி - 077 665 1814
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பணியாளர் தேவை

**வரவேற்பாளர் - ஆண்கள்**
**(இரவு நேர கடமை)**

08, 09, 10 ஆகிய திகதிகளில் காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 01.00 வரை நேர்முகத் தேர்வு நடைபெறும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளவும்



உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- அலுவலக சுத்திகரிப்பாளர் (ஆண் / பெண்)





08, 09, 10 ஆகிய திகதிகளில் காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 01.00 வரை நேர்முகத் தேர்வு நடைபெறும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளவும்

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# தற்போது விற்பனையில்

**2025 இறுதிப் பரீட்சைக்கான பயிற்சிகளை உள்ளடக்கிய கையேடுகள்...!**

தரம் 1 - குட்டிச்சுடர்
தரம் 2 - குட்டிச்சுடர்
தரம் 3 - புலமைச்சுடர்



- ✓ தமிழ்
- ✓ கணிதம்
- ✓ சுற்றாடல்
- ✓ ஆங்கிலம்
- ✓ சைவ சமயம்
- ✓ சிங்களம்
- ✓ நுண்ணறிவு பயிற்சிகள்

சகல பாடங்களுக்குமான 3ஆம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் உள்ளடங்கியது

குறித்த கையேடுகள் ஊடாக உங்கள் பிள்ளைகள் குறிப்பிட்ட பாடங்களில் உயர்புள்ளிகள் பெறுவது நிச்சயம்.

முந்துங்கள்...! இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்...!

எங்கள் முகவர்களிடமும், குறிப்பிட்ட புத்தகசாலைகளிலும்.

விலை: 250/-

தொடர்பு:- 021 492 7471/72
077 656 9617

# பேரிடரால் பாதித்த 7 வீதி
# வடக்கில் தற்காலிக சீர

யாழ்ப்பாணம், டிசெ. 7


வடக்கு மாகாணத்தில் இயற்கைப் பேரிடர் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஏழு பிரதான வீதிகள் தற்காலிகமாகச் சீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப் பட்டுள்ளன என்று வடமாகாண வீதி அபி விருத்தித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபிராமி தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது-

வடமாகாணத்தில் பேரிடரால் பாதிக்கப் பட்ட வீதிகளைப் பார்வையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேத நாயகன் மக்களின் இயல்பு வாழ்க் கையை விரைவாக மீட்டெடுக்கும் வகை யில் சேதமடைந்த வீதிகளைத் தற்காலி கமாகவேனும் உடனடியாகச் சீரமைக் குமாறு பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைய, அரச திணைக்களங்கள், இராணுவம் மற்றும் உள்ளூராட்சிசபை களின் ஒத்துழைப்புடன் வீதிகள் மிகக் குறுகிய காலத்தில் புனரமைக்கப்பட் டுள் ளன.

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரி வில் பண்ணை வீதி 40 மீற்றரும், முல் லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கேப்பாப்பிலவு புதுக்குடியிருப்பு வீதி 25 மீற்றரும், வவுனியா மாவட்டத்தில் பூவர சன்குளம் செட்டிக்குளம் வீதி 50 மீற்ற ரும், மாந்தை மேற்கில் மாந்தை பரப்புக் கடந்தான் வீதி 5 மீற்றரும், கட்டாடுவயல் - இராமயன்குளம் வீதி 500 மீற்றரும், மகிழங்குளம் பள்ளமடு வீதி 40 மீற்ற ரும் திருத்தப்பட்டுவருகின்றது. முல் லைத்தீவு மாவட்டத்தில் பேரிடரால் திடீ ரெனச் சேதமடைந்த கற்சிலைமடு பேரா றுப்பாலம் வீதி அபிவிருத்தித் திணைக்க ளத்தால் உடனடியாகத் திருத்தியமைக் கப்பட்டுப் பொதுமக்களின் போக்குவரத் துக்காக மீண்டும் திறந்து விடப்பட்டுள் ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான ஏனைய வீதிகளிலும் ஏற் பட்டுள்ள சேதங்களைச் சீர்செய்யும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வருகிறன- என்றுள்ளது. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண நகரில் நிவாரண சேகரிப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு வழங்குவதற்காக வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பால் யாழ்ப்பாணம் நகரத்தில் நிதி மற்றும் நிவாரண சேகரிப்பு நடவடிக்கைகள் கடந்த புதன் கிழமை முன்னெடுக்கப்பட்டன. பல்வேறு மொத்த விற்பனை வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அடிப்படைத் தேவைகளுக்கான பொருள்களையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அன்பளிப்புச் செய்தனர். நிதிச் சேகரிப்பில் யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா, வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன், மாநகரப் பிரதி முதல்வர் இ.தயாளன், மாநகரசபை உறுப்பினர்களான ஜெ.மயூரன், என்.எம்.அப்துல்லாஹ், ஏனைய உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கு பற்றினர். (க)


## தேவை

ஒட்டு வேலை செய்யக்கூடியவர்கள் தேவை.

077 77 222 15



## அலுவலக உதவியாளர் தேவை


யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர்கள் தேவை.

பெண்களும் விண்ணப்பிக்க முடியும்.

**தொடர்பு: 077 120 9998**

(CR 46656 A1 A)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15 . 07 . 1947

மறைவு 05 . 12 . 2025

காற்றோடு கலந்த சுவாசம்...
கண்ணீராய் வடிந்த பாசம்...
உலகினை கடந்து போனாலும்...
உறவுகளை கடந்து போனாலும்...
ஓர் நல்ல மனிதனை... உங்களோடு...
பயணித்தவர்கள் மறந்து போவார்களா...

எமது நண்பன் **விஸ்வலிங்கம் மௌனகுரு (மதன்)** அவர்களின் அன்புத் தந்தை

### இராமநாதன் விஸ்வலிங்கம்

**(முன்னாள் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர்)**

அவர்கள் கடந்த 05.12.2025 அன்று கனடாவில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி**
1994 (O/L) Batch. 1997 (A/L) Batch
**பழைய மாணவர்கள்**

(CS 30880) A

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 03 . 01 . 1981

மறைவு 07 . 11 . 2025

### திருமதி த.இ. நிலாந்தினி அருள்பிரகாசம்

**(பணிப்பாளர், வெளிநாட்டு அலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு)**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாள் இன்று 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் முற்பகல் 11.45 மணிக்கு வழிபாடு நிறைவேற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 07.11.2025 மொறோக்கோவில் காலஞ்சென்ற அன்னாரது பூதவுடலை இலங்கைக்கு கொண்டுவர உதவிய கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், பிரதி அமைச்சர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், அமைச்சின் உயர் அதிகாரிகள், எகிப்தின் இலங்கைக்கான தூதுவர், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் நிலாந்தினியுடன் சேவையில் இணைந்த சக உத்தியோகத்தர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்னாரின் பிரிவிற்கு நேரிலும் தொலைபேசிமூலமும் தமது அனுதாபங்களையும் இரங்கல்களையும் தெரிவித்த உறவுகளுக்கும் 19.11.2025 இல் நடைபெற்ற இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

(CS 60092) E

## மரண அறிவித்தல்



மண்ணில் 05 . 01 . 1952

விண்ணில் 06 . 12 . 2025

### திருமதி சரஸ்வதி செல்வரட்ணம்

யாழ். சுதுமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி செல்வரட்ணம் அவர்கள் நேற்று (06.12.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - இந்திராணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நித்தியானந்தனின் அன்புச் சகோதரியும், ஞானரூபத்தின் மைத்துனியும், சரண்ஜா, லாவண்ஜா, தருணன் ஆகியோரன் பாசமிகு தாயாரும், பிரபாகரன், சுதனன், கிருஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜானா, சந்தோஷ், சதுஷன், அஷ்வின், ஆர்த்திக், விதுஷன், லக்ஷயன், சதுர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பாக்கியம், தனலக்சுமி மற்றும் திலகவதி ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், கண்மணி, சிவமணி, ராசமணி ஆகியோரின் மைத்துனியும், மற்றும் செல்வராசாவின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**தருணன் - 077 424 3626**

**தகவல்: குடும்பத்தினர்**

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 10 . 12 . 1958

மறைவு 08 . 11 . 2025

### கந்தசாமி தர்மகுலதேவி

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம் தாயே!
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அனைவருடனும்
கலகலப்பாகப்பேசி மகிழ்விக்கும்
உங்கள் சிரித்தமுகம் கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(CS/60110) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தை முன்னிட்டு இலட்சார்ச்சனை இடம்பெற்றது. (ச-17)

# தற்காலிக புனரமைப்போடு வட்டுவாகல் பாலம் திறப்பு

முல்லைத்தீவு, டிசெ.7

வட்டுவாகல் பாலம் தற்காலிகமாக புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாக பெய்த கனமழையால் நீர்மட்டம் உயர்வடைந்தமையால் பரந்தன், புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு ஏ-35 வீதி இரண்டாகப் பிளவுபட்டு போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தது. அதனைச் சீர்செய்யும் பணிகள் இரவு பகலாக இடம்பெற்றிருந்தன.

இந்தநிலையில் தற்போது வட்டுவாகல் பாலமூடான போக்குவரத்துக்கு வழிவகை செய்யப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)


## வாகனம் விற்பனைக்கு

Unregistered Dihatsu mira es கார் விற்பனைக்கு - 658 CC, 2800 Km, வான் நீல நிறம், 2023 உற்பத்தி வருடம், Auction Grade 5

077 056 3891

## வீடு விற்பனைக்கு

3 ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் 1 1/2 பரப்புக் காணி, கிணறு, வீட்டுடன் சிவன் கோவிலிலிருந்து 300m தூரத்தில் Tower க்கு அருகில் விற்பனைக்கு உண்டு.

077 651 1746, 077 615 8906

(CR/46642) J-1

## மணமகள் தேவை

முல்லைத்தீவு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பிறந்த திருவோண நட்சத்திரம் கொண்ட சொந்தத் தொழிலுடைய தோசமெதுவுமற்ற, தீய பழக்கம் அற்ற மணமகனிற்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :

077 033 7959

(CS 60082) A

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 29.10.1973 — மறைவு 04.12.2025

**மகேஸ்வரன் மத்தரன் (மதீன்)**

(உரிமையாளர் - Media Electro Mart, Mahesh & Son - Chavakachcheri)

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் மத்தரன் (மதீன்) அவர்கள் நேற்று (04.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

வாணி ரெக்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்
யாழ்ப்பாணம்

செ. மணிவர்ணன் குடும்பம்
சாவகச்சேரி,
நல்லூர்.

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபலமான நட்சத்திர ஹோட்டலுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- Accountant & Assistant Accountant (கணக்காளர், உதவிக் கணக்காளர்)
- Junior or Senior Sous Chef
- Chef de partie
- Waiter (உணவு பரிமாறுபவர்)
- Kitchen Helper (சமையல் உதவியாளர்)

ஹோட்டல் அனுபவம் விரும்பத்தக்கது.

076 788 6621

hr.northgatejaffna@gmail.com
gmnorthgatejaffna@outlook.com

உங்கள் சுயவிபரக்கோவையை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(CS/59352) J-1

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- Show room Working & Marketing (காட்சியறை வேலை, சந்தைப்படுத்தல்)
- Service Engineer Bike & Three Wheeler (மோட்டார்சைக்கிள் மற்றும் முச்சக்கர வாகன பொறியியலாளர்)
- Laundry - Security & Store Maintenance (பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பராமரிப்பாளர்)

உங்கள் சுயவிபரக்கோவையை இந்த Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

காலை 10.00 - பிப 4.00 வரை தொடர்பு கொள்ளவும்.

077 723 8373

## வீடு விற்பனைக்கு

2 பரப்பு, Clear deed
6 Rooms
3 Bathrooms
Fully tiled
யாழ்ப்பாணம் மருதடி ஒழுங்கை
(Close to Nallur) St.Jhon's Bosco School க்கு மிக அருகாமையில்
65 Million (Negotiable)

Contact:
0772883353

www.EQMarriageService.com
CALL 076 664 9401

ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|---|
| 1992, இந்து, பூரம்<br>பட்டதாரி<br>**P. R. OFFICER**<br>சொந்த இடம்: தாவடி<br>மணமகள் பதிவு இல:12263 | 1997, இந்து, மிருகசீரிடம்<br>பட்டதாரி<br>**TEACHER**<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:12253 | 1994, இந்து, மஹம்<br>பட்டதாரி<br>**MANAGER, AUSTRALIA**<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:12227 |
| 1993, இந்து, அனுசம்<br>பட்டதாரி<br>**DOCTOR, U.S.A**<br>சொந்த இடம்: உடுப்பிட்டி<br>மணமகள் பதிவு இல:12264 | 2000, இந்து, மிருகசீரிடம்<br>பட்டதாரி<br>**QUANTITY SURVEYOR**<br>சொந்த இடம்: இணுவில்<br>மணமகன் பதிவு இல:12251 | 1989, இந்து, அவிட்டம்<br>பட்டதாரி<br>**DATA ANALYST**<br>சொந்த இடம்: சாவகச்சேரி<br>மணமகள் பதிவு இல:12185 |
| 1993, இந்து, அனுசம்<br>பட்டதாரி<br>**EXECUTIVE**<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:12250 | 1997, இந்து, சித்திரை<br>பட்டதாரி<br>**TEACHER**<br>சொந்த இடம்: மாதகல்<br>மணமகன் பதிவு இல:12202 | 1974, இந்து, சித்திரை<br>பட்டதாரி<br>**BUSINESS, LONDON**<br>சொந்த இடம்: பருத்தித்துறை<br>மணமகள் பதிவு இல:12219 |
| 1987, இந்து, பூரம்<br>பட்டதாரி<br>**MANAGER, LONDON**<br>சொந்த இடம்: உரும்பிராய்<br>மணமகள் பதிவு இல:12261 | 1996, இந்து, திருவாதிரை<br>பட்டதாரி<br>**SENIOR MEDICAL ANALYST**<br>சொந்த இடம்: கொக்குவில்<br>மணமகன் பதிவு இல:12156 | 1995, இந்து, சித்திரை<br>பட்டதாரி<br>**I.T ENGINEER**<br>சொந்த இடம்: வவுனியா<br>மணமகள் பதிவு இல:12135 |
| 1995, இந்து, அவிட்டம்<br>பட்டதாரி<br>**ENVIRONMENTAL OFFICER**<br>சொந்த இடம்: நல்லூர்<br>மணமகள் பதிவு இல:12200 | 1997, இந்து, பூரம்<br>பட்டதாரி<br>**LECTURER**<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:12162 | 1982, இந்து, ரேவதி<br>பட்டதாரி<br>**ENGINEER, AUSTRALIA**<br>சொந்த இடம்: அரியாலை<br>மணமகள் பதிவு இல:12214 |

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே. CALL 076 664 9401



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மிகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

## அம்மன் அருள்வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா?
- பிரிவால் வேதனையா?
- தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?
- வளைகாப்பு சடங்கு முறைப்படி செய்து தரப்படும்.



இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்)

தொடர்புகளுக்கு: 077 281 1234



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீரில் கரைந்த ஈரவிழிகளுடன்
## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
27 . 10 . 1959



இறைவன் அடியில்
10 . 12 . 2022

# அமரர் கார்த்திகேசு அம்பிகாபதி

**திதி : கார்த்திகை மாத அபரபக்க தேய்பிறை திருதியை**
**(வெற்றிலையூர், சவூதிஅரேபியா TASECO - TMSS.A.LTD Driver,**
**முன்னாள் முகாமையாளர் Everyday குடிநீர் விநியோகம்)**

ஆண்டுகள் மூன்று போனாலும் அப்பா
ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் எங்களை பிரிந்து சென்றதை
எங்ஙனம் எம் மனம் ஏற்றுக்கொள்ளும்?
என்றும் மாறிடாத விடாமுயற்சியும்
குடும்பத்தில் நீர் கொண்ட அக்கறையும்
யார் மனமும் நோக நடந்திடாத நற்குணமும்
நேர்கொண்ட நிமிர்ந்த பார்வையும்
எம் மனதில் இன்றும் விம்பமாய் தெரிகிறது அப்பா
உங்கள் சந்ததியை கடவுள் பயத்துடனும்
கண்ணியத்துடனும் வாழக் கற்றுக் கொடுத்தீர்களே அப்பா
காவல் தெய்வமாய் எங்களோடு என்றும் நீங்கள் இருப்பதை எண்ணி
என்றும் உங்கள் நினைவுகளோடு.


என்றும் நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,

பழையகண்டி , காரைநகர்.

(CS/60095) J-1

## முதலாம் ஆண்டு
# நினைவு அஞ்சலி

தோற்றம்
03 – 06 – 1980



மறைவு
19 – 11 – 2024

கடந்த 19.11.2024 அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

தெய்வத்திரு.
# அழகசுந்தரம் கிருபாகரன்
**(திதி : சதுர்த்தி)**

**அதிபர். கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை**
அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் நாளை 08.12.2025 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**465/26. பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்.**

**தகவல் - குடும்பத்தினர்**
**077 722 5292, 070 333 7070**

# மரண அறிவித்தல்

பிறப்பு
31
05
1941



இறப்பு
05
12
2025

# திருமதி கௌரி இராமச்சந்திரன்

**இளைப்பாறிய உபஅதிபர்**

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 6ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கௌரி இராமச்சந்திரன் அவர்கள் 05.12.2025 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - விசாலாட்சி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், நாகம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் ஞானகௌரி, ஜனார்த்தன், நிஷாந்தன் (குகன்) ஆகியோரின் அன்பு தாயாரும் சாந்தன், ஜனந்தினி, வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் கீர்த்தன், சேயோன், பிரியன், பிரவீன், சாரங்கன் (ஷான்), கிஷானி, கிரிஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியும் சுந்தரமூர்த்தி, மனோன்மணி, சௌபாக்கியகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரலீலா, காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், மகேஸ்வரன், மகேஸ்வரி, பத்மநாதன், வாமதேவன், சண்முகநாதன், தியாகராஜா, சந்திரகாந்தி, வரதலெட்சுமி மற்றும் புஸ்பராணி, புஸ்பகலா விஜயநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரல்ளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 12.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை 08.12.2025 திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பொரளை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்
குடும்பத்தினர்
0774465693

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 08 . 1951



மறைவு
06 . 12 . 2025

## திருநாவுக்கரசு சண்முகராசா

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதியைப் (இராமுப்பிள்ளை வீதி) பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சண்முகராசா நேற்று (06.12.2025) சனிக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு திருநாவுக்கரசு தங்கரத்தினம் தம்பதியரின் மூத்த மகனும், தவமலர்தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - முத்துரத்தினம் அம்மா தம்பதியரின் மருமகனும், நிரூபிகா (ஆசிரியை, கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயம்), அமுதினி (யாழ். மாவட்ட மேல் நீதிமன்றம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சகீலன் (மாகாண காணி ஆணையாளர் அலுவலகம்), பிரதீஸ் ஆகியோரின் அன்பு மாமனும், தவமணிதேவி, ராதா, தவராசா, புஸ்பராஜா, லிங்கராசா, காலஞ்சென்ற தனராசா மற்றும் தனவதி, இன்பம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜானன், சைதன்யா, பவித்திரா, மித்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல் :**
**தி. தவராஜா (சகோதரன்)**
**(ஓய்வுநிலை உத்தியோகத்தர், பிரதேச சபை)**
**077 2140 483**
**தி.புஸ்பராஜா - 075 9977 166**

(CS 60104) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 12 . 1951



மறைவு
06 . 12 . 2025

## மாணிக்கம் தர்மலிங்கம்

**(கோண்டாவில் ஆட்டிறைச்சிக்கடை உரிமையாளர்)**

காளிகோவிலடி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தர்மலிங்கம் நேற்று (06.12.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், தர்சினியின் அன்புக் கணவரும், றமியா, றஜீபா, டசானி, சுவர்ணராஜ், நிகாரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாரூபன், சசிகரன், மதன், வனிதா, ஜெயக்குமரன், றாதநீதன் ஆகியோரின் மாமனாரும், தனுசிகன், பிரவீனா, நிதுசன், திவ்யா, நிறோமிகா, பிருந்துஜன், டிலுக்சிகா, அதீஸ், ஆருஸ், அதீனா, அக்ஷசாயினி ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்ற பவளம் மற்றும் இரத்தினேஸ்வரி, கமலராணி, கௌசலாதேவி, புஸ்பராணி, இந்திராணி, கலாராணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை, தம்பையா, பாலசுந்தரம் மற்றும் நடராசா, கந்தையா, வர்ணகுலசிங்கம், உதயகுமார், விஜயநந்தினி, ரவீந்திரன், சுபாஸ்கரன், சசிகரன், சுதர்ஜினி, சுஜந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**காளிகோவிலடி, கோண்டாவில் கழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 60117) A

# மரண அறிவித்தல்

மண்ணில்
21 . 04 . 1982



விண்ணில்
04 . 12 . 2025

## பரமசிவம் துஷியந்தன் (அகி)

**(வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்)**

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவம் துஷியந்தன் (அகி) அவர்கள் 04.12.2025 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் பரமசிவம் - புஸ்பமலர் தம்பதியரின் பாசமிகு மகனும், பாலசுப்பிரமணியம் பவானந்தினி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காயத்திரியின் பாசமிகு கணவனும், மோகிஷாவின் பாசமிகு தந்தையும், சிவாஜினி (ஜேர்மனி), சிவதர்சினி (ஜேர்மனி), சிவமாலினி, கபிலன் (ஜேர்மனி), துஷியந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கேதீஸ்வரதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயதாஸ் (ஜேர்மனி) மற்றும் வசந்தராஜ் (மேற்பார்வையாளர், யாழ். மாநகர சபை), சிவயோகநாதன் ஆகியோரின் மைத்துனரும், திரிஷிகா, ஷகான், நஜிந், சஜீர்த்தன், சுஜீவ், டர்சிகா, தனலக்ஷன், லக்ஷிகா, டனிஷ், டனுஷ் ஆகியோரின் அன்பு மாமனும், கேசினி, றோசினி, ஜேசினி, ஈழவி ஆகியோரின் சித்தப்பாவும், நிக்ஷன், றஸ்மிகா, ஆகியோரின் பேரனும், ஶ்ரீதரன் - கார்த்திகா வின் மைத்துனரும், பகீரதனின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு கல்வியங்காட்டிலுள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**G.P.S. வீதி,**
**கல்வியங்காடு.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 60105) A

# மரண அறிவித்தல்



தோற்றம்
16.12.1973

மறைவு
06.12.2025

## சொக்கலிங்கம் செந்தில்நாதன்

**(உரிமையாளர் - சப்தகி ஸ்டோர்ஸ்,**
**நவீன சந்தை, வவுனியா)**

சரவணை மேற்கு, வேலணையை பிறப்பிடமாகவும் சோயா ஒழுங்கை, யாழ். வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் செந்தில்நாதன் அவர்கள் நேற்று (06.12.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை - மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகலட்சுமியின் அன்புக் கணவரும், சங்கவி, சாரபி, சப்தகி (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்நாதன், கேதாரகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராஜ், சிறிஸ்கந்தராசா, கிருஸ்ணராசா, சிவானந்தராசா (ஜேர்மனி), ரூபராசா, (அமரர்) யோகராசா, ரேவதி (ஜேர்மனி), பாமினி ஆகியோரின் மைத்துனரும், இராமச்சந்திரனின் (ஜேர்மனி) சகலனும், கேசிகா, அனுஸ்கா ஆகியோரின் பெரியப்பாவும், சோபிதா, தனுசிகன், கர்சயன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

CS 46651) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடலின்றிய வீதிச்சீரமைப்பு வெள்ள இடரில் பெரும் பாதிப்பு!

## தண்ணிமுறிப்பு விவசாயிகள் அவதி

முறையான திட்டமிடல் இன்றிய வீதிச்சீரமைப்புக் காரணமாக தற்போது ஏற்பட்ட வெள்ளப்பேரிடரில் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதாக முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு நீர்ப்பாசனக் குளத் தின்கீழான சுமார் 3000ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்களுக்குச் செல்லும்பாதைகள்முறையானதிட்டமிடலின்றிச் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முழுமைப்படுத்தப்படாமல் கைவிடப்பட்டுள்ளன.

பொருத்தமற்ற காலப்பகுதியிலும் பாலங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அப்பாலங்களை அமைக்கும் வேலைத்திட்டங்கள் எவையும் நிறைவுறுத்தப் படவில்லை. அதேபோல் தண்ணிமுறிப்பு விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதியும் முழுமையாகச் சீரமைக்கப்படவில்லை. இதனால் தற்போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இந்த வீதிகள் மிகப் பெரிய அளவில் சேதமடைந்துள்ளன.

எனவே குறித்த வீதிப்போக்குவரத்தை தற்காலிகமாகச் சீர்செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

(ச-246)

## கடைகள் வாடகைக்கு உண்டு

யாழ். பல்கலைக்கழக சூழலில் கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 5704 893

(CS 30879) A

## தேவை

Water Proof (நீர்க்கசிவு) தடுக்கும் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு:-

077 232 3000

(CS/60118) J-1

## காணவில்லை



**இரத்தினேஸ்வரன் கபில்சன்**

படத்தில் உள்ளவரான சிறுப்பிட்டி மேற்கு. ஜனசக்தியைச் சேர்ந்த 22 வயதுடைய இரத்தினேஸ்வரன் கபில்சன் என்பவரை கடந்த 05.12.2025 இரவு 7.30 மணியிலிருந்து காணவில்லை. இவர் கடைசியாக வெள்ளை நிற சேட் அணிந்திருந்தார். இவர் தொடர்பான தகவல் தெரியும் பட்சத்தில் தொடர்பு கொள்ளவும்.

077 038 1357

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 29.10.1973 மறைவு 04.12.2025

அமரர்

**மகேஸ்வரன் மதீதரன்**

(உரிமையாளர் - மகேஸ் அன் சன்ஸ்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## மரண அறிவித்தல்

மலர்வு 26 . 12 . 1951



உதிர்வு 30 . 11 . 2025

**திரு. சதாசிவம்பிள்ளை உமாகாந்தன்**

தும்பளை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், Sydney, Australia வை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சதாசிவம்பிள்ளை உமாகாந்தன் அவர்கள் கடந்த (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை Australia வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்பிள்ளை - கமலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வன்மலாவின் (Australia) ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற அல்போன்ஸ் தம்பதியரின் மருமகனும், டிலக்ஷினி (வைத்தியகலாநிதி, சிறுநீரக நோய்க்கான விசேட வைத்தியர் - Australia), டினோஜன் (புள்ளி விபரவியல் சார் நிதித்துறையின் காப்பீட்டுக் கணிப்பாளர் - UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுஷ்யா (Australia), ஸ்ரீகாந்தன் (Sweden), அருந்ததி (ஓய்வுபெற்ற ஆசிரியை - தும்பளை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (பொறியியாலாளர் - Australia), சத்தியவதி, குலேந்திரன் (ஓய்வுபெற்ற ஆராய்ச்சி உதவியாளர், விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் மைத்துனரும், அகிலன் (பெறியியலாளர் - Australia), பிருந்தா (இலங்கை வங்கி உத்தியோகத்தர்), கிரிஜா (சித்த வைத்திய அதிகாரி), கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமாவும், மைதிலியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (09.12.2025) செவ்வாய்க்கிழமை கீழ்காணும் முகவரியில் Australia நேரப்படி முற்பகல் 10.15 மணியிலிருந்து 11.45 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் - Palm Chapel at Macquaric Park Crematorium
முகவரி - Corner of Dellhi and Plassey Road, North Ryde
நேரம் - 10.15am - 11..45 am

தொடர்புகளுக்கு:
அருந்ததி - 077 039 7808
அனுஷ்யா - +61 413 735 140 CS/60113) J-1

தகவல்:
குடும்பத்தினர்

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு - 59

* Diploma in English / Spoken English
* Diploma in ICT
* Diploma in Artificial Intelligence/ Data Science
* Diploma in Psychology & Counseling
* Diploma in Political Science

● காலம்: 03 மாதங்கள் ● பெறுமதிமிக்க சான்றிதழ்

ஆரம்பம் : 07.12.2025

IPS to your future

Thirunelvely
TP:074 234 9120

## பூசகர் தேவை

பன்னாலை தெல்லிப்பளை அருள்மிகு குருநாதர் சுவாமி கோவிலுக்கு பூசகர் தேவை.
ஏனைய விபரம் நேரில்

தொடர்புகளுக்கு:-
077 712 6859, 076 488 8253

(CS/46680) J-1

## கட்டடம் வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தியில் எவ்வகையான தேவைக்கும் மிகப் பொருத்தமான இடம். பல்கலைக் கழகம், எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் மிகவும் கேந்திர முக்கிய வியாபார மையம், வாகன நிறுத்தக் கூடிய இடவசதி அமைந்துள்ள இடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 80 59 50

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் வீட்டில் தங்கிநின்று வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு 35-45 வயதெல்லைக்குட்பட்ட பணிப்பெண் தேவை

தொடர்பு:072 5942 668

(CS 30877) A

## நல்லூர்க் கந்தன்

[திருமண சேவை]

எல்லா மதம், இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

பருத்தித்துறை வீதி, நல்லூர் MC அருகில், யாழ்ப்பாணம்

(தொடர்பு: 077 9733 183 (வி.ஜெயந்தி)

(CS 60114) A

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பயிற்றப்பட்ட பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆண் முதியவர்களை எமது இல்லத்தில் சேர்ப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி

077 810 6857, 075 974 2495, 021 226 5551

www.valvaieldershome.com

## உடனடி விற்பனைக்கு

அலுவலக பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopies மற்றும் Scanner உடனடியாக குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 666 5628

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சுன்னாகம் மற்றும் நெல்லியடியில் இயங்கும் இலத்திரனியல் காட்சியறைக்கு ஆண் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

உங்கள் சுயவிபரக் கோவையை இந்த Whatsapp க்கு அனுப்பவும்.

தொடர்புகளுக்கு: 070 410 1358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல், சப்ரகமுவ, வடக்கு, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில், தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படும். எனவே, சேதங்களைக் குறைத்துக்கொள்ள பொது மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேநேரம் திருகோணமலை முதல் மன்னார் ஊடாக முல்லைத்தீவு, காங்கேசன்துறை வரையிலான கரையோரக் கடற்பிராந்தியங்களில் மழை பெய்யக்கூடும் - என்றுள்ளது. (அ-ம)

## வெள்ள...

இது தொடர்பில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ள இடரால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 25 மாவட்டங்களுக்குமான நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 624 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிக்கை செய்தோம். அந்த அறிக்கையின் பிரகாரம் 365.6 மில்லியன் ரூபா எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

முற்றிலும் சேதமடைந்த வீடுகள், பகுதியில் சேதமடைந்த வீடுகள், வீடுகளுக்கு சேதங்கள் ஏற்படா விட்டாலும் வெள்ளத்தால் சிறிய அளவு பாதிக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றையும் இந்த கொடுப்பனவுக்கான தகுதிக்குள் உள்ளடக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இடர் நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோரின் கையொப்பங்களை பெற்ற, தகுதியான பயனாளிகளுக்கு மாத்திரமே கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சரியான முறையில் அந்த 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்ட பின்னர் மேலதிகமாக நிதி ஒதுக்கீடு எங்களிடம் இருந்தால் அந்த நிதி, இடர் நிவாரண சேவைகள் நிலையத்துக்கு எம்மால் அனுப்பிவைக்கப்படும். தற்போது கிடைக்கப்பெற்ற கடிதங்கள், சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு அமைவாக படிவங்களை நிரப்புவதன் ஊடாக தங்களது பிரதேசங்களில் இருக்கின்ற பயனாளிகளை பிரதேச செயலர்கள் அடையாளம் கண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரையில் 7.9 வீதமானவர்கள் இந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணமானது அதிகளவான சனத்தொகையைக் கொண்ட மாவட்டம். வெள்ளப் பேரிடரின்போது மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் இரவு பகல் பாராது அர்ப்பணிப்போடு செயற்பட்டார்கள். உறுதிப்படுத்தப்படாத தகவல்களைப் பகிர்கின்றபோது கடமை உணர்வுடன் அர்ப்பணிப்பாக பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மனவுளைச் சலுக்கு உள்ளாகின்றனர் - என்றார். (அ-ம-27)

## 25,000 ரூபா...

தொடர்புடைய கிராம அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். ஜே/123 கிராம அலுவலர் பிரிவில் 27 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களாக அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றில் 20 குடும்பங்களே தமக்கு நிதியுதவி தேவையில்லை. உலருணவுப் பொதிகளே போதும் என்று எழுத்து மூலம் அறிவித்துள்ளன. (அ-ம-26)

## கொடுப்பனவு...

மோசடியான முறையில் தகவல்கள் வழங்கப்பட்டு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறப்படுவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எனவே, கொடுப்பனவு பெறுவோரின் விவரங்களை பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியிருந்தார்.

இதையடுத்தே, 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறுபவர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கூறியுள்ளார். கிராம சேவகரின் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்தப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-27)

## டிசெம்பர்...

தாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறை நிரப்புப் பிரேரணை ஊடாக நிவாரணப் பணிகளுக்காக 50 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை விடுவிப்பதற்கான நாடாளுமன்ற நடைமுறைகளுக்காகவே எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## சிறைச்சாலைக்கு...

யிருப்புப் பொலிஸாரால் கசிப்பு தொடர்பான நீதிமன்ற பிடியாணை மூலம் கைது செய்யப்பட்ட 30 வயதுடைய நபர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது தொடர்பில் கைதியின் சகோதரி யாழ்ப்பாணத்தில் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி ஊடகங்களுக்கு அவதூறு பரப்பும் வகையில் கருத்து தெரிவித்திருந்தார். இதற்கு எதிராகவே யாழ். சிறைச்சாலை அதிகாரிகளால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதி கசிப்புடன் தொடர்புடைய வழக்கு ஒன்றுக்காக சிவராமலிங்கம் தர்சன் என்ற நபர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதன் பின்னர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்த நிலையில், சிறைச்சாலைக்கு உள்ளே அனுமதிக்க முற்பட்ட பொழுது குறித்த நபர் வலிப்பு காரணமாக நிலத்தில் விழுந்துள்ளார். அவர் சக கைதிகளால் காப்பாற்றப்பட்டு சிறைச்சாலை மருத்துவமனையில் முதலுதவி வழங்கப்பட்டு சிறைச்சாலை வாகனம் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

பின்னர் 9ஆம் திகதி சிகிச்சை முடிந்து மருத்துவமனையில் இருந்து சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மறுநாள் 10ஆம் திகதி காலை 7 மணி போல் நோய் உபாதைக்கு உள்ளாகி அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு தற்போது கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். ஆனால், அந்த நபர் பொலிஸாரால் தாக்கப்பட்டே மருத்துவமனையில் கோமா நிலையில் உள்ளார் என்று குறித்த நபரின் சகோதரியான யுவதி குற்றஞ்சாட்டியிருந்தார். அந்த யுவதி மீதே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ-ம-26)

## தலைவராக...

யாழ்ப்பாணம் - கைதடியைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் தவம் தம்பிப்பிள்ளை 2023ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முதன்முதலில் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சையை ஆரம்பித்து வைத்திருந்தார். இதன் பின்னர் பல சிறுநீரக மாற்றுச் சத்திரச் சிகிச்சைகளை இவர் வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்க மருத்துவ உதவி நிதியம் இலங்கையில் பல்வேறு சுகாதார, கல்வி மற்றும் வலுவிழந்தவர்களுக்குப் பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் திட்டங்களைச் செயற்படுத்தி வரும் நிலையில் அதன் உறுப்பினராக கடந்த 20 ஆண்டுகளாக இலங்கையில் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டுப் பல்வேறு சேவைகளை இவர் ஆற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## அரசின்...

யாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுத்தும் அப்போதைய அரசாங்கம் அலட்சியத்துடனேயே செயற்பட்டது. இதனால்தான் உயிர்த்தஞாயிறுத் தாக்குதலால் அழிவுகள் ஏற்பட்டன. அதுபோன்றுதான், நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரின் போதும் அரசாங்கம் அலட்சியமாகச் செயற்பட்டுள்ளது.

வெள்ளப்பேரிடர் ஏற்படப் போகின்றது என அரசாங்கத்துக்கு நேரகாலத்துடன் எச்சரிக்கை வழங்கப்பட்டும், விரைந்து நடவடிக்கை எடுக்காமைக்காக அரசாங்கத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசாங்கம் தனது தவறை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் வழக்குத் தொடரவும் நாங்கள் தயங்கமாட்டோம்.

அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தொடர்வது தொடர்பில் எமது சட்டத்தரணிகள் தற்போது பரிசீலனையில் ஈடுபட்டு வருகின்றனர் - என்றார். (அ-ம-44)

## வன்னியில்...

பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் பதினொராவது கிலோமீற்றரில் உள்ள பாலத்தைப் புனரமைக்கும் பணியிலேயே அவர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-113)

## இந்துக்...

கம், கடந்த ஓகஸ்ட் 28ஆம் திகதி, இரவோடு இரவாக அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றப்பட்டிருந்து. இந்தச் செயற்பாடு, பல்வேறு தரப்பினராலும் கண்டனத்துக்கு உள்ளாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

சைவத்துக்கும் தமிழுக்குமாகத் தொடங்கப்பட்ட பாடசாலை என்றவகையில், இதனை எதிர்த்து, பாடசாலையின் பண்பாட்டைப் பேணும்பொருட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யபட்டிருந்தது. அந்த வழக்கின் அடிப்படையில், கடந்த முதலாம் திகதி, உச்ச நீதிமன்றம் முக்கியமான இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. உச்ச நீதிமன்றம் வழங்கிய இந்த உத்தரவின் படி, தற்போது தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள சிவலிங்கத்தை அந்த நிலையிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு எதிராக இடைக்கால உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால தடையுத்தரவில் சிவலிங்கத்தை வேறு எந்த இடத்துக்கும் மாற்றப்படக்கூடாது, மற்றும் அது தொடர்பான வேலைகள் செய்யப்படக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளத்தால் பாதிப்புற்ற சாந்தபுரத்தில் களப்பணி!

கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் வெள்ள இடரால் பெரிதும் பாதிக்கப்பட்ட சாந்தபுரம் கிராமத்துக்கு, கிளிநொச்சி மாவட்டச்செயலர் எஸ்.முரளிதரன் தலைமையிலான குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை களப்பயணம் மேற்கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள், அடிப்படை வசதிகளை உறுதிசெய்தல், வீட்டுச்சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் தொற்றுநோய் தொடர்பாக இந்தக் குழுவினர் ஆராய்ந்தனர். (க-113)


### ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலைக்கு ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி தேவை.

இடம் : திருநெல்வேலி யாழ்ப்பாணம்

தொடர்பு: 077 361 8559

(CS 60066) E

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ். மானிப்பாய் சந்தைக்கு முன்பக்க வீதியில் 500m தூரத்தில் நல்ல சூழலில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 18 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 606 128

### வேலையாட்கள் தேவை

கொழும்பில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலுக்கு ஆண் தொழிலாளர்கள் மற்றும் யாழ்ப்பாண உணவுகளை சமைக்கக்கூடிய ஒரு சமையல்காரர், உணவு பரிமாறுபவர் தேவை. உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

- சமையல் காரர் : 90000 - 100000
- உணவு பரிமாறுபவர் (Waiter) : 51000 - 60000

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

077 134 5588

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- நவாலி அரசடிச் சந்தியிலிருந்து 250m தூரம்
- நவாலி மகா வித்தியாலயம் 250m தூரம்
- நவாலி கொத்துகட்டி வீதியில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

தொடர்பு:- 076 990 3039
074 029 2338

(CS 30864) A

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km

தொடர்பு:- 076 860 2770
076 987 8617

(CS 30865) A

### வாடகைக்கு

முதியோர்களுக்கான இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் வாடகைக்கு.

விவேகா- 075 981 5996

### பணிப்பெண் தேவை

அரசு கடமை புரியும் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்ய 30 வயதுக்குட்பட்ட தங்கி நின்று கடமைபுரிய பெண் பணியாளர் தேவை.

1 லட்சத்திற்கு குறையாது சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

071 744 3185

(CS/60015) J-1

### Spoken English & Grammar Classes

Grade 7 to பட்டதாரிகள்

International School Students

K.Ganesh B.A (UOP)

யாழ் கந்தர்மடம்

077 766 8725

### வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.

சம்பளம் :- 50,000/-

உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 480 33 79

### A/L PHYSICS

A/L Physics

Past papers 1979 - 2025 வரை

அலகு ரீதியாக செய்து விடப்படும்.

தொடர்புகளுக்கு:

076 498 9961, 076 686 7099

(CS/60087) J-1

### காணி உடனடி விற்பனைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில், கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

வீடு விடுதி கட்டுவதற்கு உகந்தது.

தொடர்பு: 077 723 5740

### வேலையாட்கள் தேவை

மேசன், தச்சுவேலை, பிளம்பர், வெல்டர், வர்ணபூச்சாளர், எலெக்ரிக்கல் வேலை செய்பவர்கள் உடனடியாக தேவை.

தொடர்பு:- 077 312 1328

### வேலையாட்கள் தேவை

மேசன் மற்றும் உதவியாட்கள் தேவை குறுகிய காலத்திற்கு.

மேசனுக்கு 4000+ உணவு.

உதவியாளுக்கு 3500+ உணவு வழங்கப்படும்.

இடம் யாழ்ப்பாணம்

தொடர்பு: 077 066 2238

### வேலைக்கு ஆட்கள் தேவை

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.

வயது எல்லை 20 - 40 க்கு உட்பட்ட ஆண்கள் தேவை.

தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- இயந்திர இயக்குனர் (Machine Operator)
- சரக்கறைக் காவலர் (Store Keeper)
- ஓட்டுனர் (Drivers)
- நாட்டாமை தொழிலாளர்கள்
- கூலித்தொழிலாளர்கள் (Laborers)


தொடர்புகளுக்கு:

RG Brothers, No: 228, Canel Road, Elakanda Hendala Wattala.

077 434 6367

(CS 60002) E


## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 01 . 1962

மறைவு 29 . 11 . 2025

### வேலாயுதம் தயாபரன்

யாழ். அத்தாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தயாபரன் அவர்கள் கடந்த (29-11-2025) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னதம்பி வேலாயுதம் - வேலாயுதம் செல்வசரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் நவரட்ணம் மற்றும் - தெய்வபூமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலா அவர்களின் அன்புக் கணவரும், கபிலன், விவேதா, திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், அநுராத மாலன் (கொத்தலாவல) அவர்களின் அன்பு மாமனாரும், தவமலர், வரதராஜா, நரேந்திரன், லோகேந்திரன், கிருஷ்ணவேணி, தவேந்திரன், காலஞ்சென்ற பவதாரணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடேசன், பாலகிருஷ்ணன், சற்குருபரன், நாகேந்திரன், நகுலேந்திரன், பிறேமா, நளினி, யசோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07-12-2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 08:00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 905 7749

அத்தாய்,
அல்வாய்.

(CS/46641) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

வட்டியும் குட்டிபோட்டு குட்டியும் குட்டிபோட்டு
கட்டிய வீட்டையும் விட்டிங்கே – சட்டென
சென்றதுவே சொத்துக்காய் சண்டைபோட்ட சண்டியரின்
நின்றிட்ட நில்லாத மூச்சு.

பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ... ஞாயிற்றுக்கிழமை (07.12.2025) சிகரம் :168



'டித்வா' பேரிடர் காலத்தில் புத்தளம் ஏ–12 வீதியில் கலா ஓயா நீரில் சுமார் 70 பயணிகளுடன் சிக்குண்ட பேருந்தில் பயணித்த ஆதவன் வேணுசன் (மொறட்டுவ பொறியியல் பீட மாணவன்), அந்த இடருக்குள் இருந்து உயிரோடு மீண்ட அனுபவத்தை உதயன் – சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

■ ஔண்யன்
\+
■ நா.தங்கவேல்
(சாவகச்சேரி செய்தியாளர்)

# பேய்வெள்ள முற்றுகைக்குள் பேருந்து..!

## வெள்ளக்காட்டுக்குள் திக் திக் கணங்கள்...!

**27.11.2025.**

வீட்டுக்கு வெளியே மழை கொட்டிக்கொண்டிருந்தது.

வாழ்க்கையில் மறக்கவே முடியாத, மரணத்தை மிக அருகில் உணரும் சம்பவத்தை எதிர்கொள்ளப் போகின்றேன் என்பது அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. மூன்று நாள் குறுகிய விடுமுறை முடிவடைகின்றது. 27ஆம் திகதி சென்றால்தான் பல்கலைக்கழகத்துச் செல்லமுடியும். வழக்கம்போல, மீசாலையில் 27 ஆம் திகதி இரவுநேரத் தபால்சேவை ரயிலான யாழ்தேவியில் 9 மணியளவில் ஏறிக்கொண்டேன். பல்கலைக்கழகத் தோழமைகளான கபில்ராஜ், அயஜ், ஜக்சன், டினோஜன் ஆகியோரும் அதே ரயிலில் இருந்தார்கள். மழையோ இன்னும் மூர்க்கமாகப் பெய்து கொண்டிருந்தது. ஆனால் இரும்புப்பாம்பான ரயிலுக்கு அந்த மழை ஒரு பொருட்டே இல்லை. அந்தப் பெருமழையை அலட்சியப்படுத்திக் கொண்டு தன் தண்டவாளத்தில் ரயிலின் பயணம் தொடர்ந்தது. முறிகண்டி வரை எல்லாமே நன்றாகத்தான் இருந்தன. முறிகண்டியில் தான் முதல் அபசகுனம்.

### முறிகண்டியில் முறிந்தமரம்

மழையை ஊடறுத்தபடி போய்க்கொண்டிருந்த ரயில் முறிகண்டி ரயில் நிலையத்தில் அப்படியே நின்றுவிட்டது. பயணிகள் ஏறுவதற்காக சில நிமிடங்கள் மட்டுமே அங்கே ரயில் வழமையாக நிற்கும். ஆனால் அன்றைக்கு மிக நீண்டநேரமாகியும் ரயில் புறப்படுவதாகத்தெரியவில்லை. எவ்வளவுநேரம் தான் உள்ளேயே இருக்கமுடியும்? ஏன் இவ்வளவு நேரமாக முறிகண்டியை விட்டு ரயில் அசைய மறுக்கின்றது என அறிவதற்காக, வெளியே எட்டிப்பார்த்தோம். அப்போதுதான் ரயில் தண்டவாளத்தின் குறுக்கே பெரியதொரு மரம் வீழ்ந்து கிடப்பதை அறியமுடிந்தது. எனினும் ஒரு மணித்தியாலமாகப் போராடிய ரயில்நிலைய அதிகாரிகளின் முயற்சியால் அந்த மரம் அகற்றப்பட, மீண்டும் யாழ்தேவி சடசடத்தபடி வேகமெடுத்தது. அதன்பின்னர் வழியில் எந்தத் தடையும் இருக்கவில்லை. இன்னும் சில மணித்தியாலங்களில் மொறட்டுவவை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தபோது. அதற்கு அநுராதபுரத்தில் ஆப்பு வைத்தது 'டிக்வா' பேரிடர்.

### அநுராதபுரத்தில் தடை

நள்ளிரவு தாண்டிய தருணத்தில் அநுராதபுரம் ரயில் நிலையத்தை யாழ்தேவி சென்றடைந்தபின்னர், முறிகண்டியைப் போல முன்னோக்கி அசையாமல் நின்றுவிட்டது. 'இங்கும் ஏதாவது மரங்கள் தண்டவாளத்தின் குறுக்கே விழுந்துவிட்டனவா?' என்ற கேள்வி ரயிலில் இருந்தவர்களிடையே எழத் தொடங்கியது. எங்களுடைய கேள்விகளுக்கு ஒரு மணித்தியாலத்தின் பின்னரே பதில் கிடைத்தது. அந்த ரயில்நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் எம்மிடம் வந்தனர். 'எல்லாரும் மன்னிக்க வேண்டும். இதற்கு அங்கால நீங்கள் ரயிலில் செல்லமுடியாது. ரயில் பாதைகளை வெள்ளம்மூடிவிட்டது. எனவே இப்போதைக்கு ரயிலில் பயணிக்க முடியாது. நீங்கள் திரும்பிச் செல்வதே நல்லது' என்று அந்த அதிகாரிகள் சொல்லச்சொல்ல, எமக்கோ கடும் அதிர்ச்சி. 'அப்படியானால் கம்பஸுக்கு போகேலாதா? இனி திரும்பி வீட்ட போய், இன்னொருநாள் வெளிக்கிடுறதை விட பேசாமல் இஞ்சையிருந்தே ஏதும் பஸ்ஸில போவம். காசு போனாலும் பரவாயில்லை. முதல்ல கம்பஸுக்குப் போய்ச் சேர்ந்திடவேணும்' என்ற எண்ணத்தில் நானும் நண்பர்களும் ரயிலை விட்டிறங்கி, அநுராதபுரம் பஸ்நிலையத்துக்குச் சென்று மொறட்டுவவுக்குச் செல்லக்கூடிய பஸ்ஸைத் தேடத்தொடங்கினோம். புல்மோட்டையில் இருந்து கொழும்பு செல்லும் தனியார் பஸ்ஸொன்று கண்ணில் தட்டுப்பட ஓடிப்போய் அதில் ஏறிக்கொண்டோம். எம்மைப்போலவே ரயிலில் பயணித்த வேறு சிலரும் அந்த பஸ்ஸில் வந்து ஏறினர். 69 பேர் அந்த பஸ்ஸுக்குள் இருந்தோம். பேராபத்தை நோக்கி எங்கள் பஸ் பயணிக்கப்போகின்றது என்பதை நாங்கள் 69 பேரும் அப்போது தெரிந்திருக்கவில்லை.



புத்தளம் இராஜாங்கனையில் பஸ்ஸோடு வெள்ளத்தில் சிக்கிய பயணிகளின் திகிலூட்டும் அனுபவம்

### அங்கால போகவேண்டாம்!

மீண்டும் பயணம் தொடங்கியது. ஏற்கனவே ரயிலில் பயணித்த அசதியும், மழைக்குளிருமாகச் சேர்ந்து வாட்ட, 'இனி எப்படியும் மொறட்டுவ போய்ச் சேர்ந்துவிடுவோம்'என்ற நிம்மதியில் அப்படியே உறங்கிவிட்டேன். திடீரென பஸ் ஒரு முறை சடுதியாக 'பிறேக்' அடித்து, குலுங்கி நின்றது. அந்தக் குலுக்கலில் தூக்கம் தொலைந்துபோனது. வெளியே பலர் கத்தியபடி ஏதோ சொல்லிக்கொண்டு, பஸ்ஸின் முன்பக்கமாக பலமாகக் கைகளால் தட்டினார்கள். புத்தளம், இராஜாங்கனைப் பகுதியில் தான் எங்கள் பஸ் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. 'இதற்கு அங்கால போகவேண்டாம். ஒரே வெள்ளம். திரும்பிச் செல்லுங்கள்' இதைத்தான் திரும்ப அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 'சரி, பஸ் பயணமும் அம்போதானோ? பேசாமல் அநுராதபுரத்தோடு திரும்பியிருக்கலாமோ? இப்போது புத்தளத்தில் இருந்து திரும்பிப் போறது இன்னும் கரைச்சலெல்லோ' என்று மனதுக்குள் சலித்துக்கொண்டேன்.

'எங்களுக்கு முன்னால் சென்ற பஸ்லெல்லாம் போட்டுதுதானே? இது பெரிய பஸ். இந்த வெள்ளத்துக்கால போகும், பிரச்சினையில்லை. இப்பிடி கனக்க வெள்ளங்களுக்கால எல்லாம் எங்கட பஸ்ஸோட போயிருக்கிறம்' என்று சாரதியும், நடத்துநரும் அந்த மக்களுக்குச் சொன்னபோது, எனக்கு 'அப்பாடா, பயணத்துக்கு தடையில்லை'என்று நிம்மதி பிறந்தது.

2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூச்சை விட்ட பஸ் மூர்க்கமான வெள்ளம்

எங்கள் பஸ் புறப்பட்ட பின்னரும், அந்த மக்கள் கூக்குரலிட்டு எம்மை நிறுத்தவே முயற்சித்தார்கள். ஆனால் அவர்களின் குரல் அந்தப் பெருமழைக்குள் அடங்கிவிட, எங்கள் பஸ் உறுமியபடி வெள்ளத்தைக் கிழித்தபடி விரையத்தொடங்கியது. முதலில் குதிரைவேகத்தில் சென்ற பஸ், வெள்ளத்தோடு போட்டிபோட முடியாமல் நத்தைவேகத்துக்கு இறங்கியது. ஒருகட்டத்தில் பஸ்ஸின் இயந்திரப்பகுதிக்குள் இருந்து விநோதமான சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அடுத்தகணமே, வெள்ளத்துக்குள் சேடமிழுத்துக் கொண்டிருந்த பஸ், ஒரு குத்திட்டு ஆடி அடங்கி மூச்சை முற்றாக நிறுத்திவிட்டது. பஸ் நின்றதும்தான் தாமதம், குபுகுபுவென வெள்ளம் பஸ்ஸுக்குள் ஏறத்தொடங்கிவிட்டது. வெளியே மழை பேயாட்டம் ஆடிகொண்டிருக்க, அந்த வேகத்தை சமப்படுத்துவது போல பஸ்ஸுக்குள் வெள்ளத்தின் மட்டம் உயர்ந்துகொண்டே இருந்தது.

## ஆபத்பாந்தவனான பத்மநிகேதன்




அப்போதுதான் ஆபத்பாந்தவனாக எம்மோடு பஸ்ஸின் மேற்தளத்தில் நின்ற இளைஞர் ஒருவர் தனது போனை நீட்டினார். அந்த இளைஞரின் பெயர் பத்மநிகேதன். யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் பணிபுரிந்த அவர், பதவியுயர்வு தொடர்பான நேர்முகப் பரீட்சைக்காக கொழும்பு செல்வதற்காக வந்திருந்தார். அவரது போனில் 'மொபிடெல்' சிம் இருந்தது. அந்த வலையமைப்புமட்டும் இயங்குநிலையில் இருந்தது. எங்களுக்கு பத்மநிகேதனும், அவரது போனும் கடவுள் போல தெரிந்தார்கள்.

என்னோடு பயணித்த பல்கலைக்கழக நண்பர்களில் ஒருவனின் தந்தை கிராமசேவகராக இருக்கிறார். எனவே முதலில் அவருக்கு போன் பண்ணி, நாங்கள் சிக்கிக்கொண்ட விடயத்தைக் கூறி, புத்தளம் மாவட்டச் செயலர் மூலம் எங்களைக் காப்பாற்றுமாறு கெஞ்சினோம். நாங்கள் சிக்கியிருக்கும் பகுதியின் 'லொக்கேசனையும்' அனுப்பிவைத்தோம். அவர் உடனடியாக தனக்குப் பரிச்சயமான மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரனுக்கு போன் மூலம் விடயத்தைச் சொல்ல, மன்னார் மாவட்டச் செயலர் உடனடியாக இதனை புத்தளம் மாவட்டச் செயலருக்குத் தெரியப்படுத்தினார். 'மிகவிரைவில் மீட்கப்படுவீர்கள்' என்று தகவல் கிடைக்க, ஆசுவாசப் பெருமூச்சை விட்டுக் கொண்டோம்.

## கைகொடுத்த கடைக்கூரை

அந்தக் காற்றடைத்த படகில் ஐவர் மட்டுமே பயணிக்கலாம். எடை அதிகரித்தால் அந்தப் படகு கவிழவேண்டியதுதான். அத்தோடு மிக அதிகதூரமும் பயணிக்கமுடியாது. ஆனால் இப்போதைக்கு அந்தக் காற்றடைத்த படகுமட்டுமே தஞ்சம். எனவே கடற்படையினரும், சுழியோடிகளும் எம்மை பஸ்ஸில் இருந்து ஐந்தைந்து பேராக



இறக்கி, காற்றடைத்த படகுமூலம் அருகே இருந்த உயரமான கடைக்கட்டடமொன்றின் சீற் கூரையில் கொண்டு சென்று சேர்ப்பித்தனர். அந்தக் கடையொன்றும் அவ்வளவு பெரியதல்ல. 30 அடி நீளமும், 20அடி அகலமும் கொண்ட சிறிய கடைதான். ஆனால் இப்போதைக்கு அதில்தான் நாங்கள் 69 பேரும் இருக்கவேண்டும். ஏனென்றால், அந்தச் சுற்றுவட்டாரத்தில் இருந்த எல்லாக் கட்டடங்களையும் வெள்ளம் வந்த வேகத்தில் அள்ளிக்கொண்டு போய்விட்டது. இந்தக் கடை ஒன்றுதான் தப்பிப் பிழைத்திருந்தது. அந்தக் கடைக்கட்டடமும் இல்லாவிட்டால், நாங்கள் உயிர்தப்பியிருக்க முடியாது.

03

## காலைவாரிய கலாவாவி

என்னசெய்வதென்று எவருக்கும் புரியவில்லை. எல்லோரும் பரபரப்போடு கீழிருந்த பொருள்களையெல்லாம், வெள்ளம் மூடாதபடி உயரமான மேற்தளத்துக்கு இடமாற்றினோம். அப்படியே எல்லோரும் பஸ்ஸின் மேற்தளத்துக்கு நாங்களும் ஏறிவந்துவிட்டோம். மேலே நின்று பார்த்தபோதுதான் எப்படியான பயங்கரத்துக்குள் நாங்கள் சிக்கி விட்டோம் என்று புரிந்தது. பார்க்குமிடமெல்லாம் ஒரே வெள்ள காடு. கிட்டத்தட்ட பத்திப் பன்னிரெண்டு அடி உயரமான வெள்ளம். அந்தவெள்ளம் சும்மா நிற்கவில்லை. பேரிரைச்சலோடு வீதியின் ஒருமுனையில் இருந்து மறுமுனைக்கு காட்டாறு போல பாய்ந்துகொண்டிருந்தது. தப்பித்தவறி அந்த வெள்ளத்துக்குள் விழுந்தால் அவ்வளவுதான். அப்படியே அடித்துக்கொண்டு வெள்ளம் சென்றுவிடும்.

'ஊர்மக்கள் மறிக்க மறிக்க நாங்கள் வந்தது பெரும் தவறு' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டோம். ஆனாலும் சாரதி, நடத்துநரிலும் தவறு சொல்லமுடியாது. ஏனென்றால் ஊர்மக்கள் மறித்த இடத்தில் இவ்வளவு வெள்ளம் இருக்கவில்லை. அத்தோடு இந்த பஸ்ஸுக்கு முன்னால் சென்ற பஸ் எதுவும் திரும்பி வரவில்லை. அதனால்தான் நாங்களும் செல்லலாம் என எங்கள் பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் எண்ணியிருப்பார்கள். அவர்களின் கணக்கும் சரிதான். ஆனால் அந்தக் கணக்கை கலாவாவி மாற்றிவிட்டது. நீர்வரத்து அதிகமென்பதால் கலாவாவி உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியிருந்தது. எனவே அதனைத் தவிர்க்க, உடனடியாக அதன் வான்கதவுகளைத் திறந்துவிட்டார்கள். அடைபட்டுக்கிடந்த வெள்ளம் மடைதிறந்து ஆவேசமாக ஓடிவந்தபோதுதான், அதிகாலையில் எங்கள் பஸ் அந்தக் காட்டாற்று வெள்ளத்தில், நட்டநடுவீதியில் சிக்கிவிட்டது. ஒரு நிமிடம் தாமதமாக கலாவாவியின் வான்கதவுகள் திறக்கப்பட்டிருந்தால், எங்கள் பஸ் தப்பியிருக்கும். இதுதான் காலமென்பது.

## போன்களும் கைவிட்டன

வெள்ளம் எங்களை நிம்மதியா இருக்க விடவில்லை. கொட்டும் மழையில், எங்களிடம் இருந்த சில குடைகளைப் பிடித்தபடி பஸ்ஸின் மேற்தளத்தில் நின்றபடி 'எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று உதவி கேட்கும் முயற்சியில் இறங்கினோம். ஆனால் காலம் எங்களை முழுமையாகக் கைவிட்டிருந்தது. தொலைத்தொடர்பு சேவைகள் செயலிழந்ததால், எவரது தொலைபேசியில் இருந்தும் யாருக்கும் அழைப்பெடுக்க முடியவில்லை. இந்த விடிகாலையில் சுற்றிலும் வெள்ளக்காடு உள்ள நிலையில், தொலைபேசிகளும் கழுத்தறுத்ததால் என்னசெய்வதென்று தெரியாமல் பதைபதைத்துக் கொண்டிருந்தோம்.

## முதல் முயற்சி

சில நிமிடங்களில் எம்மை நோக்கி 'ஜே.சி.பி' இயந்திரமொன்று வருவதைக் கண்டோம். ஆனால் இந்தப் பெரும் வெள்ளத்தோடு எதிர்நீச்சல் போடமுடியாமல், அந்த 'ஜே.சி.பி' இயந்திரம் பின்வாங்கி, திரும்பிச் சென்றுவிட்டது. இப்போது பொலபொலவென விடிந்து விட்டிருந்தது.

எமது அவலம் தொடர்பாக எமது கையடக்கத் தொலைபேசிகள் மூலம் அனர்த்த முகாமை அவசரப் பிரிவினர், பொலிஸார் என்போருக்குத் தெரியப்படுத்தினோம். அதைவிட புத்தளம் மாவட்டச் செயலரும், மன்னார் மாவட்டச் செயலரும் நாங்கள் பஸ்ஸோடு வெள்ளத்துக்குள் மாட்டுப்பட்ட விடயத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரை கொண்டு சென்றிருந்தனர்.


## வந்தது படகு

28.11.2025 வெள்ளிக்கிழமை காலை.

கலாவாவியில் இருந்து பாய்ந்து வரும் வெள்ளத்தின் மூர்க்கம் வரவர அதிகரித்தபடி இருந்தது. அது எங்கள் பஸ்ஸையே அடித்துச் சென்றுவிடுமோ என்றும் எமக்கு அச்சம் பற்றிக்கொண்டது. எனவே எங்களிடமிருந்த பெட்சீற், சாரம், சேலை போன்றவற்றை முடிச்சுப் போட்டு ஒரு கயிறு போல மாற்றினோம். அந்தத் துணிக் கயிற்றின் ஒரு அந்தத்தை பஸ்ஸின் கண்ணாடிகளுக்கு ஊடாகச் செலுத்தி அதனைச் சுற்றிக்கட்டி னோம், கயிற்றின் மறு அந்தத்தை நீச்சல் தெரிந்த பயணிகள் சிலர் உயிரைப்பணயம் வைத்து, அந்தக் காட்டாற்றுக்குள் நீந்திச் சென்று வீதியோர மாக இருந்த மின்கம்பத்தில் கட்டினார்கள். இப்போது அந்தத்துணிக்கயிறு பஸ்ஸை வெள்ளம் அடித்துச் செல்லவிடாமல் பிடித்துக்கொண்டு நின்றது. சிறிது நேரத்தில் தூரத்தே ஒரு காற்றடைத்த சிறுபடகொன்று எம்மை நோக்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டதும் 'கடவுள் நம்மைக் கைவிடவில்லை' என்று நம்பிக்கை பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தப்பிவந்த நாய்க்குட்டி

வெள்ளத்தில் பொருள்கள் மட்டும் வரவில்லை. கண்முன்னே ஆடுமாடுகள், பன்றிகள் கூட அடித்துச் செல்லப்படுவதைப் பார்த்தும் அவற்றைக் காப்பாற்ற முடியாதவர்களாக நின்றோம். அந்தச் சமயத்தில் நாய்க்குட்டியொன்று அந்த வெள்ளத்தில் தத்தளித்தபடி நாங்கள் இருந்த கூரைப்பக்கமாக வந்தது. அதனை மீட்டெடுத்து கூரையில் எம்மோடு வைத்துக்கொண்டோம். அதுவும் எங்களோடு ஒட்டிக்கொண்டு, வெள்ளத்தை பயத்தோடு பார்த்தபடி இருந்தது. இந்த ஒரு இரவைக் கடந்துவிட்டால் எல்லாம் சீராகிவிடும் என்ற சிறு நம்பிக்கையும் இருக்கத்தான் செய்தது., ஆனால் இந்த இரவைக் கடக்க வேண்டுமே? எங்களின் வேண்டுதல்கள், பிரார்த்தனைகளோடு அந்த பெருமழை கொட்டிக்கொண்டிருந்த அந்த இரவை வெள்ளக் காட்டின் நடுவே கடந்தோம்.



## தோற்றுப்போன ஹெலிகள்

ஹெலிகள் எம்மை நெருங்கிய போது, அவற்றின் காற்றாடிகளாலும், சத்தத்தாலும் உண்டான அதிர்வால் நாம் அமர்ந்திருந்த கடைக்கூரையின் சீற்றுகள் பலமாக ஆடத்தொடங்கின. ஒருகட்டத்தில் அவை வெடித்து விழுந்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. ஹெலிகள் இன்னும் தாழ்வாக வந்திருந்தால் நிச்சயமாக அத்தனை பேரும் வெள்ளத்துக்குள் வீழ்ந்திருப்போம். இப்படி ஹெலியால் மீட்க முயன்றால் எல்லோரையும் பலிகொடுக்க வேண்டியிருக்கும் என்பது விமானப்படையினருக்கும் புரிந்துவிட்டது.எனவே எங்களைக் ஹெலிமூலம் மீட்கும் முயற்சியை கைவிட்டு, வந்தவழியே ஹெலிகள் பறந்து போயின. பெரிய ஹெலிகள் வந்ததால் தான் இப்படி அதிர்வு ஏற்படுகின்றதென நினைத்து பின்னர் சிறியரக ஹெலி ஒன்று வந்தது. அதற்கும் அதே அதிர்வு, அதே அச்சம்தான். அந்தக் ஹெலியும் மீட்புநடவடிக்கையைக் கைவிட்டு திரும்பியது. அடுத்தது என்ன? என்று எங்களுக்குத் தெரியவில்லை. வெள்ளம் கூரையை அடித்துச் சென்றுவிட்டால் நாங்கள் கூண்டோடு கைலாசம் போகவேண்டியதுதான். ஈரமாக இருந்த சீற்.எங்களின் பாரத்தை தாங்காமல் எந்தக் கணமும் உடைந்து விழலாம் என்ற நிலை. ஒவ்வொரு கணமும் உயிர் கொல்லும் கணமாகவே எங்களுக்குத் தெரிந்தது.

## வெள்ளத்திடம் மண்டியிட்ட பஸ்

நாங்கள் எல்லோரும் பஸ்ஸில் இருந்து இந்தக் கடையின் சீற் கூரையில் அமர்ந்த அடுத்தகணமே பெரும் சத்தம்.

நாங்கள் 69 பேரும் இருந்தபோது, பஸ்ஸின் எடை அதிகமாக இருந்ததால் வெள்ளத்தால் பஸ்ஸை பெரியளவில் அசைக்க முடியவில்லை. ஆனால் நாங்கள் கடைக்கூரைக்கு வந்துவிட்டதால், எடைகுறைந்த பஸ்ஸை வெள்ளம் தூக்கி குத்தியது. பஸ் குத்துவாக்கில் வானைப்பார்த்தவாறு வாய்பிளந்து நின்றது. நாங்கள் கட்டிய துணிக்கயிறு இல்லாவிட்டால் அந்த பஸ் காட்டாற்று வெள்ளத்தோடு அடிபட்டுப் போயிருக்கும். எம்மை கூரையில் இறக்கியபின்னர் மூன்று கடற்படையினர் எமக்குத் துணையாக நிற்க, காற்றடைத்த படகும் சென்றுவிட்டது. சுற்றிலும் பாய்ந்தோடும் பேய்வெள்ளம். நிற்காமல் பொழிந்து கொண்டிருக்கும் மழை. கைக்குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்களென எங்கள் 69 பேருக்கும் அந்த ஒற்றைக்கூரையே கடைசிப் பிடிமானம். எல்லோருக்குமே நம்பிக்கை போய்விட்டது. இந்த வெள்ளத்துக்குள் சிக்குண்டு நாங்கள் அனைவரும் அள்ளுண்டு போகவேண்டியதுதான் என நினைத்துக் கலங்கத் தொடங்கினோம்

## எதிர்பாராத பயங்கரம்

29.12.2025

சனிக்கிழமை

நாங்கள் நினைத்தது போல இரவு கடந்தாலும், எங்களைச் சூழ்ந்திருந்த அபாயம் கடக்கவில்லை. நிலைமை இன்னும் மோசமானது. எங்கள் அச்சத்தை அதிகப்படுத்தும் வகையில் ஒரு பயங்கரம் நடந்தது.

எங்கள் 69 பேரின் பாரத்தையும் தாங்கமுடியாமலும், ஈரத்தாலும் அந்த கடைக்கூரையின் ஒருபகுதி சீற் திடீரென உடைந்து விழுந்தது. அவ்வளவுதான். அந்த சீற் பகுதியில் இருந்த சிலர் அப்படியே வெள்ளத்துக்குள் வீழ்ந்தனர். சாதாரண வெள்ளமென்றால் பரவாயில்லை. கலாவாவியில் இருந்து கட்டுக்கடங்காமல் வெறிகொண்டு பாயும் வெள்ளத்தில் விழுந்துவிட்டால் தப்புவதை நினைத்தும் பார்க்கமுடியாது. வெள்ளத்தில் வீழ்ந்தவர்களில் பெண்களும் இருந்தனர். அவர்கள் வீழ்ந்ததைக் கண்டதும் நாங்கள் அவர்களைக் காப்பாற்றுமாறு கத்திக் கூக்குரலிட்டோம். ஆனால் தெய்வாதீனமாக அந்த வெள்ளத்தில் வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்ட எம்மவர்களில் நால்வர் மரக்கொப்புகளில் சிக்குண்டு, தொடர்ந்தும் வெள்ளத்தில் இழுபட்டுப் போகாமல் தப்பினர். இதனால் உடனடியாகவே அந்த வெள்ளத்தில் குதித்த கடற்படையினர் அவர்களைப் பத்திரமாக மீட்டு மீண்டும் கடைக்கூரைக்கு கொண்டுவந்தனர்.

## இதுதான் கடைசி நாளா?

இதுதான் உலகில் எங்களின் கடைசிநாள் என்பதாகவே எண்ணினோம்.

உரத்த சத்தமாக எல்லோரும் அவரவர் இஷ்ட தெய்வங்களை வேண்டினோம். அந்தக் கூரையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் போல ஒன்றாக இருந்தோம். இந்துக்கள் தேவாரம், தோத்திரங்கள் பாடினோம், பிள்ளையாரை, முருகப்பெருமானை, காளியை, அம்மனை கண்ணீர் சொரியக் கும்பிட்டு மன்றாடினோம். கிறிஸ்தவர்கள் இயேசுவை வேண்டினார்கள். இயேசுவின் தோத்திரம் பாடினார்கள், செபித்தார்கள். முஸ்லிம்கள் அல்லாவை, நபியை வேண்டினார்கள். சிங்களவர்கள் புத்தபெருமானை வழிபட்டார்கள். அந்த வெள்ளம் எங்களுக்குள் பேதம் பார்க்கவிடவில்லை.

## கடற்படைப்படகா? நோவாவின் படகா?

எங்களைக் காப்பாற்றுவதற்கான எல்லாவழிகளும் அடைபட்டுவிட்டன என்று நாம் எண்ணிய நேரத்தில் ஒரு திருப்பம். பிரளயத்தால் இந்த உலகம் அழிந்த போது, நோவாவின் படகு தான் மக்களைக் காத்தது என்று பைபிளில் ஒரு கதை வரும். அதைப்போல எங்களைக் காக்கவும் நோவாவின் படகினைப் போன்று, வெள்ளத்தைக் கிழித்தபடி கடற்படைப் படகுகள் நாமிருந்த கடைக்கூரைக்கு வந்துசேர்ந்தன. கடற்படைச் சுழியோடிகள் கூரையில் இருந்த எங்களை கயிற்றின் மூலம் படகுக்கு மாற்றினார்கள். பின்னர் எங்கள் எல்லோரையும் வெள்ளப்பாதிப்பு இல்லாத பகுதிக்கு படகு மூலம் கடற்படையினர் கொண்டுவந்தனர். கடற்படையினர் எங்களைக் காப்பாற்றும் போது, எம்மிடம் வெள்ளத்தில் தத்தளித்து அடைக்கலமாகி இருந்த நாய்க்குட்டியையும் நாம் பத்திரமாகக் கொண்டுவந்து ஊர்மக்களிடம் கையளித்தோம்.

## மக்களின் அன்புவெள்ளம்

அந்த ஊர்மக்கள் எங்களை தங்கள் அன்பினால் திக்குமுக்காட வைத்துவிட்டனர். இனமத பேதமின்றி, ஆபத்தில் இருந்து தப்பியவர்கள் என்ற அனுதாபத்தில் பேருதவி செய்தார்கள். துவண்டுகிடந்த எங்கள் மனங்களுக்கு தேநீர், வெந்நீர், குளிர்பானங்கள், ஆடைகள், உணவுகள் என்று தங்கள் உபசரிப்பினால், ஒத்தடம் தந்தார்கள் அந்த மக்கள்.

கிராம உத்தியோகத்தர்கள், படையதிகாரிகள், மருத்துவர்கள் என எல்லோரும் இணைந்து அம்புலன்ஸ் மூலம் நொச்சியாகம ஆதார மருத்துவமனைக்கு எம்மைக் கொண்டு சென்று சேர்த்தனர். நொச்சியாகம ஆதார மருத்துவமனையில் மருத்துவர்களும், தாதியர்களும் எங்கள் எல்லோரையும் அன்பாக உபசரித்தனர். விடுதிகளில் தங்கவைத்து, சகல உடற்பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். எமக்கு நல்ல ஆடைகளை அணியத்தந்தார்கள். அவர்களின் மருத்துவக் கவனிப்பிலும், அன்பிலும் மிகவிரைவாகவே எமது உடல்நிலை தேறிவிட்டது. எங்களோடு இருந்த ஒரு முதியவர் சிகிச்சையின் போது உயிரிழந்தார் என அறிந்து கவலையுற்றேன். அதேபோன்று எம்மோடு இருந்த பத்மநிகேதனின் சடலமும் மீட்கபட்ட செய்தி இதயத்தை சுக்குநூறாக்கியது.

## ட்ரோனில் வந்த உணவு

அந்த நேரத்தில் தூக்கம், பசி என்று எதைப்பற்றியும் எம்மால் சிந்திக்கவே முடியவில்லை. எப்படியாவது இந்த அபாயத்தில் இருந்து தப்பினால் போதும் என்பதே எங்களின் ஒரே எண்ணமாக இருந்தது. எங்களிடம் ஒரு சில குடைகளே இருந்தன. அவற்றில் ஒரு குடையை கைக்குழந்தையோடு இருப்பவர்களுக்கென்று கொடுத்துவிட்டோம். மிகுதிக் குடைகளைப் பிடித்தபடி, அதற்குள் நின்றுதான் போனில் எங்களைக் காப்பாற்றும் கோரிக்கைகளை பல தரப்புகளுக்கும் விடுத்தபடி இருந்தோம். ஜனாதிபதியினதும் மற்றும் அதிகாரிகளினதும் உத்தரவின் பிரகாரம் ட்ரோன் மூலம் எமக்கு உணவு, போர்வைத்துணி என்பன அனுப்பி வைக்கப்பட்டன. உணவு, போர்வை என்பன ட்ரோனில் வரும் போது, கூடவே ஒரு கத்தரிக்கோலும் கட்டி அனுப்புவார்கள். அந்தக் கத்தரிக்கோலால் உணவையும், போர்வையும் ட்ரோனோடு இணைத்திருக்கும் கயிற்றை வெட்டி எடுப்போம். இப்படி மூன்றுமுறை உணவு வழங்கினார்கள். அத்தோடு பத்மநிகேதனின் பையில் பணிஸ், மைலோ, பால் பைக்கெற் என்பன இருந்தன. அவற்றை குழந்தைகளுக்கு கொடுத்தோம். அதைவிட அருகே அந்த வெள்ளத்துக்குள்ளும் தலைநீட்டிக்கொண்டிருந்த எலுமிச்சை மரங்களில் இருந்து கடற்படையினர் தேசிக்காய்களை பறித்துவந்து அதைப் பிழிந்து நாவில் விட்டு சுவைக்கச் சொன்னார்கள். உணவும் தூக்கமுமில்லாத நேரத்தில் அந்தப் புளிச்சுவை உடலில் சக்தியூப்பையும், சோர்வையும் தடுக்கும் என்பதற்காகவே அப்படிச் செய்தார்கள். வெள்ளத்தில் சிலகடைகளில் இருந்த பொருள்கள் மிதந்து வந்தன. அவற்றுள் பிஸ்கற் பெட்டிகளும் இருந்தன. அவற்றை மீட்ட கடற்படையினர், அந்த பிஸ்கற்றுகளை முதலில் தாங்கள் உண்டுபார்த்து, அது உட்கொள்ள உகந்ததுதான் என்பதை உறுதிசெய்தபின்னர் எமக்குத் தந்தார்கள்.

## எங்கே பத்மநிகேதன்?

எத்தனை பேர் உடைந்த சீற்றில் இருந்தனர் என்று எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. நால்வர் மட்டும் தான் விழுந்ததாகவும், அவர்களும் காப்பாற்றப்பட்டு விட்டார்கள் எனவும் தான் நாங்கள் நம்பினோம். ஆனால் சோகம் என்னவென்றால், தன்னுடைய போன் மூலம் எங்கள் அத்தனை பேரின் உயிரையும் காப்பாற்றிய பத்மநிகேதனும் அந்த வெள்ளத்துக்குள் வீழ்ந்துவிட்டார் என்பது அப்போது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் கடற்படையினர் அவரைத் தேடி மீட்டிருக்க முடியும். அவர் சீற் உடைந்து விழுந்ததும் மேலே வரமுடியாமல் எங்கோ சிக்குண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படியும் அவர் வெள்ளத்தில் அடிபட்டுச் செல்வதைக் கண்டு காப்பாற்றி இருக்கலாம். எல்லாம் விதி. எங்களுக்காக கடைசிமட்டும் போராடிய அந்த உன்னத ஆன்மாவை இப்படி எங்களுக்கு முன்னாலேயே, எங்களை அறியாமலேயே பறிகொடுத்துவிட்டோமே. அதுதான் எங்கள் எல்லோருக்கும் உள்ள மிகப்பெரிய கவலை.

## இரண்டு நல்ல செய்திகள்

ஒருமாதிரி சீற் உடைந்து வீழ்ந்தவர்களைக் காப்பாற்றிவிட்டோம் என்ற நிம்மதி. இந்தநிலையில் இரண்டு நல்லசெய்திகள் கிடைத்தன. ஒன்று, கலாவாவியின் வான்கதவுகள் மூடப்பட்டுவிட்டன. அதனால் மெல்ல மெல்ல வெள்ளம் கட்டுப்பாட்டுக்கு வரலாம். இன்னொன்று, ஹெலி மூலம் எங்களை மீட்கும் நடவடிக்கை தொடங்கப்போகின்றது. இந்தச் செய்திகளை அறிந்ததும் 'போன உயிர் மீண்டு வந்தது போல' இருந்தது. ஆனால் அதிகநேரம் நீடிக்கவில்லை. நாம ஒன்று நினைக்க, விதி வேறுவிதமாக விளையாடியது.

## மீளுகை...!

30.11.2025 ஞாயிற்றுக்கிழமை.

நாம் வீடுகளுக்குச் செல்ல மருத்துவ அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டது. எங்களை வீட்டுக்கு கூட்டிச்செல்லுமாறு குடும்பத்தாருக்கு தகவல் வழங்கினோம். எனது மாமனாரின் துணையுடன், என் பெற்றோர் வந்து, என்னையும், என் நண்பர்களையும் மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவந்தனர். இந்தப் பேரிடர் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் உதவிய எங்களது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மருத்துவர்கள், படையதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், விமானப்படையினர், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார், மன்னார், புத்தளம் மாவட்ட செயலர்கள், ஊர் மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், நண்பர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனைவரையும் எப்போதும் மறவேன். அத்தோடு எங்களை மீட்பதற்காக தன்னுயிரையே கொடுத்த சகபயணியும், உன்னத ஆன்மாவுமான பத்மநிகேதனையும், அவன் தியாகத்தையும் என்றும் நெஞ்சில் இருத்திவைப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலாந்தன்

# நவம்பர் மாதத்தில் வரும் இரண்டு நினைவு நாட்கள்!

இம்முறை வெள்ளம், மழை, புயல் எச்சரிக்கை... எல்லாவற்றையும் மீறி மாவீரர் நாள் பரந்த அளவில், பெரியளவில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான 17ஆவது மாவீரர் நாள் இது. நவம்பர் மாதத்தில் வரும் இரண்டாவது தியாகிகளின் நினைவு நாள் இது.

நவம்பர் 13ஆம் திகதி ஜே.வி.பி. அதனுடைய தியாகிகளின் நாளை அனுஷ்டித்தது. அதே மாதத்தில் மாவீரர் நாளும் அனுஷ்டிக்கப்படுவது ஒரு நூதனமான ஒற்றுமை. இந்தச் சிறிய தீவில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இரண்டு பெரிய அமைப்புகளின் தியாகிகள் தினம் இவ்வாறு ஒரே மாதத்தில் வருவது ஒரு நூதனமான ஒற்றுமைதான்.


விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதலாவது மாவீரர் தன் உயிரைத் தியாகம் செய்த நாள் மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஜே.வி.பி.யின் தலைவர் ரோகண விஜய வீர அரச படைகளால் கைதுசெய்யப்பட்டு, குரூரமாகக் கொல்லப்பட்ட நாள் அந்த அமைப்பின் தியாகிகள் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி.யின் நினைவுநாள் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கில் நடந்தது. இலங்கைத் தீவில் இரண்டு ஆயுதப்போராட்டங்களை முன்னெடுத்து, இரண்டு தடவைகள் தடைசெய்யப்பட்ட, இரண்டு தடவைகள் நசுக்கப்பட்ட, ஓர் அரசியல் இயக்கம் ஜே.வி.பி. ஆனால் தன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழ முடியும் என்பதற்கு இந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்ல முழு உலகத்திலும் மிக அரிதான முன்னுதாரணங்களில் ஒன்று ஜே.வி.பி.. அன்றைய நிகழ்வில் விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கம் சிவப்பு நிறச் சட்டைகளாலும் முதிய பெண்களின் கண்ணீராலும் பிரகடனங்களாலும் நிறைந்திருந்தது. பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற மேலாடைகளோடு வந்திருந்தார்கள்.

அரங்கின் முன்வரிசையில் முதிய பெண்கள் சிலர் காணப்பட்டார்கள். மெலிந்த சதைப்பிடிப்பில்லாத முகங்கள். எடுப்பில்லாத உடுப்புகள். மென்மையான சோக இசையின் பின்னணியில் அவர்களில் சிலர் அழுதார்கள். அவர்களுடைய கண்ணீர் உண்மையானது. அன்னையரின் கண்ணீர் பொய்யானது அல்ல. அன்னையரின் கண்ணீர் எல்லா நினைவு நாள்களிலும் ஒன்றுதான். அதில் உள்ள உப்புச் சுவையும் ஒன்றுதான்.

அந்த நிகழ்வின் ஒளிப்படங்களை என்னோடு பகிர்ந்த ஒரு நண்பர், என்னிடம் சொன்னார், "நீங்கள் சொல்வது போல ஜே.வி.பி. அதன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த ஓர் இயக்கம். இப்பொழுது அரசாங்கமாக அந்த நிகழ்வை பெருமெடுப்பில் ஒழுங்குபடுத்தியிருக்கிறது" என்று. நான் அவரிடம் கேட்டேன் "அது ஒரு அரச நிகழ்வா? அல்லது ஒரு இயக்கத்தின் அல்லது கட்சியின் நினைவு நிகழ்வா?" என்று. அதில் நாட்டின் அரசுத் தலைவர் உட்பட பிரதான அமைச்சர்கள் பங்குபற்றினார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் அது ஒரு அரசு நிகழ்வு போலத் தோன்றும். ஆனால் அது பெருமளவுக்கு ஓர் இயக்க நிகழ்வுதான்; ஒரு கட்சி நிகழ்வுதான். அங்கே அரசுத் தலைவருக்கும் அமைச்சருக்கும் பாதுகாப்பாக படையினர் ஆங்காங்கே காணப்பட்டார்கள். எனினும் வழமையான அரசு நிகழ்வுகளைப்போல சீருடை அணிந்த படையினரின் பிரசன்னம் தூக்கலாக வெளித் தெரியவில்லை. அந்தப் படையினரின் சீருடைக்கும் அங்கு வந்திருந்த பெரும்பாலானவர்களின் சிவப்பு உடுப்புகளுக்கும் பொருந்தவேயில்லை. விறைப்பாக நின்ற அந்தப் படையினரின் துப்பாக்கிகளும் அழுதுகொண்டிருந்த முதிய பெண்களின் கண்ணீரும் ஒன்றுக்கொன்று எதிரானவை.

இப்பொழுது ஜே.வி.பி. ஆளுங்கட்சி. அதுதான் அரசாங்கம். அப்படிப் பார்த்தால் அரசாங்கத்தின் தியாகிகள் நாட்டுக்கும் தியாகிகள்தானே? அந்த அடிப்படையில் அது ஓர் அரச நிகழ்வாகத்தான் அமையவேண்டும். ஆனால் அப்படியல்ல. அங்கே இறந்தவர்களுக்காக மலர்கள் வைக்கப்பட்டன. பாடல்கள் இசைக்கப்பட்டன. உரைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் படையினரின் இராணுவ அணிவகுப்போ, மரியாதை வேட்டுக்களோ தீர்க்கப்படவில்லை. அரசாங்கத்தின்



தேசிய தியாகிகளின் நாளில் படையினரின் அணிவகுப்பு இருக்கும்; பீரங்கிகள் முழங்கும்; முப்படைத் தளபதிகளும் பிரசன்ன மாகியிருப்பர்.

ஆனால் 13ஆம் திகதி விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கில் நடந்தது ஒரு அரச நிகழ்வு அல்ல. நாட்டை ஆளுங்கட்சி அதன் தியாகிகள் நாளை தேசிய விழாவாகக் கொண்டாடவில்லை. அது தனக்கென்று தனியாக ஒரு தியாகிகள் நாளை அனுஷ்டிக்கின்றது. அதிலும் குறிப்பாக, ஜே.வி.பி.யிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தனித்தனியாக நினைவு நாள்களை அனுஷ்டிக்கிறார்கள். ஜே.வி.பி.யின் முதலாவது ஆயுதப் போராட்டம் நடந்த ஏப்ரல் ஐந்தாம் திகதியை ஒரு பகுதியினர் அனுஷ்டிக்கிறார்கள். நவம்பர் 13 ஐ ஜே.வி.பி.யிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் தனியாக அனுஷ்டிக்கிறார்கள். தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கு என்று தனித்தனியாக தியாகிகள் நாளை அனுஷ்டிப்பது போல.

ஆனால் இங்கு கவனிக்கப்படவேண்டிய வேறுபாடு என்னவென்றால், ஆளுங்கட்சியாக உள்ள ஜே.வி.பி.யின் நினைவு நாள் ஓர் அரசு நிகழ்வாகக் கொண்டாடப்படவில்லை என்பதுதான். சிங்களபௌத்த அரசின் தேசியத் தியாகிகள் நினைவு நாள் வேறாகவும் ஜே.வி.பி. அரசாங்கத்தின் தியாகிகள் நினைவு நாள் வேறாகவும் இருக்கின்றன என்பதுதான்.

சிறிய இலங்கைத் தீவு தன்னகத்தே பல தியாகிகளின் நாள்களைக் கொண்டிருக்கிறது. படையினரின் தியாகிகள் நாள், ஜே.வி.பி.யின் தியாகிகள் நாள், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள், ஏனைய தமிழ் இயக்கங்களின் தியாகிகள் நாள் என்று பல தியாகிகளின் நாள்கள் இந்தச்சிறிய தீவில் உண்டு. ஜே.வி.பி. இப்பொழுது அரசாங்கமாக இருந்த போதிலும், அதன் தியாகிகள் தினம் தனியே கொண்டாடப்படுகிறது. ஜே.வி.பி.யின் பிரதானியான அனுர ஒரு ஜனாதிபதியாக, முப்படைகளின் தளபதியாக இருக்கிறார். ஆனால் அவருடைய தோழர்களை நினைவுகூரும் நாளில் முப்படைகளின் அணிவகுப்பு இல்லை. அது இப்பொழுதும் ஓர் அரச நிகழ்வு அல்ல.

விகாரமகாதேவி பூங்காவில் கூடிய ஜே.வி.பி.யினர் சிவப்புச் சட்டை அணிந்திருந்தார்கள். விகாரமகாதேவி பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக நினைவுச் சின்னத்திலும் சிவப்பு நிறம் இருந்தது. ஆனால் அந்தச் சிவப்பு கம்யூனிச சிவப்பு அல்ல. நாட்டில் தற்பொழுது நடப்பது கம்யூனிச ஆட்சியும் அல்ல. சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்ட ஓர் ஆட்சி. ஆனால் லண்டனில் உரை நிகழ்த்திய ரில்வின் சில்வா, "வீரர்கள் சிந்திய குருதியை ஏற்று சிவப்பு மலர்கள் மலரட்டும்" என்று கூறினார். அந்தச் சிவப்பு மலர்கள் நிச்சயமாக மார்க்சிய சித்தாந்தத்தைப் பிரதிபலிக்கவில்லை. அவ்வாறு ஜே.வி.பி. ஒரு மெய்யான மார்க்சிஸ்ட் அமைப்பாக இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொண்டிருந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரில்வின் உரை நிகழ்த்திய அதே கூட்டத்தில் ஜே.வி.பி.யின் பிரதித்தலைவராக இருந்த உபதிச கமநாயக்கவின் மனைவி உரை நிகழ்த்தும் போது, மூன்றாவது தலைமுறை ஜே.வி.பி.யினர் நாட்டை ஆளும் வளர்ச்சிக்கு வந்திருப்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டினார். சிறு ஓடையாக இருந்த இயக்கம் இப்பொழுது பெரும் நதியாக மாறிவிட்டது என்றும் சொன்னார்.

ரில்வின் சில்வா லண்டனில் சிவப்பு மலர்களைப் பற்றி பேசிய அதே காலப்பகுதியில் கொழும்பில் அவர்களுடைய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் புதிதாக வந்திருக்கும் கனேடியத் தூதுவருக்கு என்ன சொன்னார்? கனடாவில் உள்ள தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் இலங்கையில் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் கருத்துக்களை முன்னெடுப்பதற்கு எதிராகவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சின்னம் போன்றவற்றை பகிரங்கமாகப் பயன்படுத்துவதற்கு எதிராகவும் கனேடிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கனடாவில் வாழும் சில செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள், இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்குப் பாதகமாக அமைந்துள்ளன என்றும் அமைச்சர் ஹேரத் கூறியுள்ளார். அதாவது நாட்டில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் சின்னங்களை கனடாவில் உள்ள தமிழர்கள் உயர்த்திப் பிடிப்பதை அவர் கனேடியத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டு கிறார். கனடாவிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற அடிப்படையில் மேற்சொன்ன செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். ஆனால் கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதிக்குள் ஜே.வி.பி. நாட்டில் இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்டது. அவ்வாறு இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம் கனடாவில் தடைசெய்யப்பட்ட சின்னங்களை தமிழ் மக்கள் முன்னிறுத்துவதைத் தடுக்கவேண்டும் என்று கேட்கின்றது.

தனது இயக்கத்தின் தியாகிகளின் நாளும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தியாகிகளின் நாளும் ஒன்று அல்ல என்பது தெளிவாகத் தெரியும் ஓர் அரசியல் சூழலில், அமைச்சர் விஜித ஹேரத் கனேடியத் தூதுவரிடம் அவ்வாறு கூறியுள்ளார். கார்த்திகை மாதத்தில் நாட்டில் இனரீதியாக இரு வேறு நினைவு தினங்கள் அனுஷ்டிக்கப்படும் ஓர் அரசியல் யதார்த்தத்தை த்டைகளின் மூலம் மாற்றமுடியாது.

இந்த நாட்டில் ஏன் இனரீதியாக இரு வேறு நினைவு நாள்கள்? எல்லாத் தடைகளையும் மீறி தமிழ்மக்கள் கடந்த 17 ஆண்டுகளாக ஏன் மாவீரர் நாளைத் தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறார்கள்? இனரீதியாக இரண்டு வேறு தியாகிகள் தினங்களைக் கொண்ட ஒரு நாட்டின் வெளி விவகார அமைச்சராகிய விஜித ஹேரத் கனேடியத் தூதுவருக்கு கூறுகிறார், அரசாங்கம் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதாக. விகாரமகாதேவி பூங்காவில் தற்காலிகமாக உருவாக்கப்பட்டிருந்த நினைவுச்சின்னத்தில் பூசப்பட்டிருந்த சிவப்பு நிறம் வெளிறும் இடம் இதுதான்.




# பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் தெரிவு முறை

# வெளிப்படையானதா? வினைத்திறன் மிக்கதா?

நரசிம்மன்

இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வின் ஆளுகைக் குட்பட்ட அரச பல்கலைக்கழகங்க ளில் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்குத் தற்போது நடைமுறையில் உள்ள சுற்றுநிருபம் தகுதியும், திறமையும் மிக்கவர்களைத் துணைவேந்தர்களாகத் தெரிவுசெய்வதற்கு வழிசெய்கி றதா? இல்லையா? என்ற வாதப்பிரதிவாதங்கள் அண்மைக் காலமாக எழுந்துள்ளன.

துணைவேந்தர் தெரிவில் ஏற்பட்ட சர்ச்சையினால் பல் கலைக்கழகமொன்றில் விரிவுரையாளர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளைப் புறக்கணித்திருப்பதன் காரணமாக குறித்தபல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மாதக் கணக்கில் தடைப்பட்டிருக்கின்றன. சுற்றறிக்கை நடை முறைகளுக்கு அமைய நடத்தப்பட்ட துணைவேந்தர் தெரிவு முடிவுகளைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிராகரித்திருப்பது நியாயமற்றதொன்று என்பதை வலியு றுத்தி அந்தப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் பணிப்புறக்கணிப்பை அறிவித்து, கடந்த இரண்டு மாதங் களாகத் தொடர்கிறது.

அதேபோல, வேறொரு பல்கலைக்கழகத்தில் சுற்றறிக்கை நடைமுறைகளின்படி நடத்தப்பட்ட துணைவேந்தர் தெரி வில் வெளியே தெரியும் வகையில் முறைகேடு இடம்பெற் றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அந்தத் தெரிவு ஜனாதிபதியி னால் நிராகரிக்கப்பட்டதோடு, அந்தத் தெரிவில் ஈடுபட்ட பல்கலைக்கழகப் பேரவை கலைக்கப்பட்டு - புதிய பேரவை நியமிக்கப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட தெரிவின் பின்னர் புதிய துணைவேந்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேற்சொன்ன சம்பவங்களைப் போலவே வேறு பல்கலைக் கழகங்களிலும் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டு அடங்கியி ருக்கின்றன. இதனால் தானோ என்னவோ தற்போது நடைமுறையில் உள்ள சுற்றறிக்கை தகுதியும், திறமையும் மிக்கவர்களைத் துணைவேந்தர்களாகத் தெரிவுசெய்வ தற்கு வழிசெய்கிறதா? இல்லையா? என்ற வினாவை எழச் செய்கிறது. அந்த ஐயம் மிக அண்மைக்காலமாக அதிகரிக் கவும் செய்கிறது.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமனம் செய்வதில் 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்க லைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10.04.2023 திகதிய 03/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையுமே தற்போது நடைமுறையில் உள் ளன. பல்கலைக்கழகங்கள் சட்ட ஏற்பாடுகளின்படி, நாட் டின் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகா ரத்தின்படி அரச பல்கலைக்கழகம் ஒன்றின் துணைவேந் தரை நியமிப்பதற்கான ஏக உரிமை ஜனாதிபதிக்கே உண்டு.

தற்போதைய சுற்றறிக்கையின்படியோ அல்லது இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படை யிலோ அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் பேரவையி னால் பரிந்துரைக்கப்படும் மூன்று பெயர்களில் இருந்து ஒருவரைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்விக்குப் பொறுப்பான அமைச்சு ஆகிய வற்றின் சிபார்சுடன் ஜனாதிபதி நியமிப்பார். பல்கலைக்கழ கங்கள் சட்டத்தின்படி நியமன அதிகாரம் ஜனாதிபதியின் கையில் இருக்கின்றபோதிலும், ஆட்சியில் இருக்கின்ற : இருந்த அரசியல்வாதிகளின் - அரசியற் கட்சிகளின் - செல் வாக்கு அந்த நியமனத்தின்மீது காணப்படும். அதனால் தான் நீதியான முறையில் வெளிப்படைத்தன்மை மிக்கதாகத் தகு தியும், திறமையும் மிக்கவர்கள் துணைவேந்தர்களாகத் தெரிவுசெய்யப்படுவது சவால் மிகுந்ததாக இருந்தது.

பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களில் இருந்து ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமே ஜனாதிபதிக்கு அதி காரம் இருக்கின்றபோதிலும், மூன்று பேரைப் பரிந்துரைப் பதற்காகப் பேரவை பின்பற்றவேண்டிய நடைமுறைகளின் காரணமாக மிகத் திறமையான பலரைப் பல்கலைக்கழகங் கள் இழந்திருக்கின்றன.

சுற்றறிக்கைகள் காலத்துக்குக் காலம் வேறுபட்ட போதிலும், பேரவையில் விண்ணப்பதாரிகளின் செல்வாக்கு அவர்க ளுடைய தகுதி - திறமையைவிட முன்னிலை வகிக்கிறது.

தற்போதைய சுற்றறிக்கைக்கு முன்னைய 02/2020 சுற் றறிக்கைக்கு முன்னர் துணைவேந்தர் பதவிக்காக விண் ணப்பிப்பவர்களில் இருந்து மூன்று பேரை வாக்களிப்பு முறை மூலம் தெரிவுசெய்து - பேரவை உறுப்பினர்களின் அதிகூடிய விருப்பு வாக்கு ஒழுங்கில் - முதல் மூன்று இடங் களைப் பெறுபவர்களின் பெயர்கள் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுவது வழமை. அதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட 02/2020 சுற்றறிக்கையின்படி, பல்வேறு துறைசார் நிபு ணத்துவமுடைய ஐந்து நிபுணர்களைக் கொண்ட மதிப்பீட் டுக்குழு ஒன்றினால் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப் பட்டு, அந்தக் குழுவினால் ஐந்து பேர் புள்ளி ஒழுங்கில் பேரவையின் தெரிவுக்காகப் பரிந்துரைக்கப்படுவர். அந்த ஐந்து பேரில் இருந்து மூவரைக் கட்டமைக்கப்பட்ட புள்ளித் திட்டத்தின் அடிப்படையில் பேரவை தெரிவுசெய்து அந்தப் புள்ளி ஒழுங்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

தற்போது நடைமுறையிலுள்ள சுற்றறிக்கையின்படி, பத வியில் இருக்கின்ற துணைவேந்தரின் பதவிக்காலம் நிறைவுபெறுவதற்கு ஆறு மாத காலத்துக்கு முன்னராக அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் கோரப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாகக் கிடைக்கும் அத்தனை விண் ணப்பதாரிகளும் தமது விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த தமது எதிர்காலத் திட்டங்கள், கடந்தகாலச் சாதனைகளின் அடிப்படையிலும், தெரிவுக்கூட்டத் தினத்தில் விண்ணப்ப தாரி ஒருவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலை சிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப் பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர் புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளை யும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடைய வராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல் திறப் பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்க ளைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கும் அளிக்கையின் அடிப்படையிலும், சுற்றறிக்கையின் படியான கட்டமைக்கப் பட்ட புள்ளித்திட்டத்தின் அடிப்படையில் பேரவை உறுப்பினர் கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் புள்ளிகளை வழங்கி, அந்தப்புள்ளிகளின் அடிப்படையில் முன்னணி வகிக்கும் மூவரது பெயர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

முன்னர் பின்பற்றப்பட்ட அல்லது தற்போது பின்பற்றப்பட்ட எந்த நடைமுறைகளிலாயினும், மூன்று பேரைப் பரிந்து ரைக்காகத் தெரிவுசெய்வதென்பது முற்றிலும் திறமை அடிப்படையிலன்றி, தனிப்பட்ட முகப்பெறுமதி அல்லது செல்வாக்கின் அடிப்படையிலேய அமைவது என்பதுதான் சுற்றறிக்கை நடைமுறையிலுள்ள பிரதிகூலமாகச் சொல் லப்படுகிறது. இந்தக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இரு உதாரணங்களின் போதும், குறித்த பல்கலைக்கழகங் களில் பேரவை உறுப்பினர்களின் புள்ளியிடல் விண்ணப் பதாரிகளின் தகுதிக்கும், திறமைக்குமன்றி பேரவை உறுப் பினர்களிடையே அவர்களுக்கிருந்த அறிமுகத்தின் அடிப் படையிலேயே இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டுள் ளது.

பல்கலைக்கழகங்களின் பேரவை என்பது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் அதன்பின் வந்த திருத்தங்களின் படி அந்தந்தப் பல்க லைக்கழகங்களில் உள்ள துணைவேந்தர், பிரதித் துணை வேந்தர், பீடாதிபதிகள் மற்றும் மூதவையினால் முன்மொழி யப்பட்ட இரண்டு உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன், இவர்களை விட ஒருவரை அதிகமாகக் கொண்ட வெளிவாரி உறுப்பினர்களைக் கொண்ட கட்டமைப்பாகும்.

இந்தக்கட்டமைப்பில் உள்வாரியாக விண்ணப்பித்திருக்கும் ஒருவர் பேரவை உறுப்பினர்களுடன் கூடிய அறிமுகத்தைக் கொண்டிருப்பராயின் அவருக்குத் துணைவேந்தர் தெரி வின்போது செல்வாக்கு அதிகமாகக் காணப்படுவது இயற் கையே. அது தவிர இயல்பாகக் காணப்படும் பிரசார உத்தி களாலும், மற்றவர்களைப் புறம்சொல்லும் பண்புகளினா லும் புள்ளியிடல் தீர்மானிக்கப்படுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பேரவையினால் பரிந்துரைக்கப் பட்ட பின்னர் ஆட்சியில் இருக்கின்ற : இருந்த அரசியல் வாதிகளின் அரசியல் கட்சிகளின் செல்வாக்கும் துணைவேந் தர் நியமனம் தொடர்பிலான ஜனாதிபதியின் முடிவைத் தீர் மானிக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் நியமனத்துக்கான பெயர்களைப் பரிந்துரை செய்வதற்காக பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள் ளது. துணைவேந்தர் தெரிவுக்காக கிடைக்கப்பெற்ற 7 விண் ணப்பதாரிகளும், பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் அளிக்கை செய்வதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

என்றுமில்லாதவாறு ஊழலற்ற அரசாங்கம் என்று மார்தட் டிக் கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்போது ஆட்சியில் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தை - குறிப்பாக வடக் கைப் - பொறுத்தவரை ஆட்சி மாறினாலும், காட்சி மாற வில்லை என்று சொல்லப்படுமளவுக்கு அரச உயர்மட்ட நியம னங்களின் போது அரசியல் செல்வாக்கு மிகுந்து காணப்படு கின்ற நிலையில், திறமை அடிப்படையில் புள்ளியிடல் அமையுமா? எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் நேர்மையான முறையில் ஜனாதிபதியின் தெரிவு அமையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்ஸ் அப் வாத்தியம் பேஸ்புக் பேத்தியும்



**பேத்தி :** தாத்தா! கனமழை எண்டுஇண்டைக்கு அறிவிச்சிருக்கினம். அதுவும் புயல் காத்தோடை எண்டு. கோயில், வாசிகசாலை எண்டு சுத்தித்திரிஞ்சு அம்மாட்டை பேச்சு வாங்காமல் ஓரிடத்திலை இருங்கோ.என்ன?

**தாத்தா :** கோயிலுக்குப் போன கொம்மா வரும்வரையிலைதானே எங்கடை ஆட்டம். சொல்லு பேஸ்புக்கிலை என்ன புதினமெண்டு?

**பேத்தி :** தாயையும் சேயையும் காப்பாற்றிய டொக்டர் கஜேந்திரனைப் பற்றித்தான் பேஸ்புக்கில ஒரே கதை.யாழ். போதனா ஆஸ்பத்திரியில நடந்த சம்பவம்தான் பேசுபொருள். தனது பணி முடிந்து வீட்டில் இருந்தடொக்டர் கஜேந்திரன் சம்பவத்தைக் கேள்விப்பட்டு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்து, அவருடைய மருத்துவக் குழுவுடன் இணைந்து ஆகவேண்டியதைச் செய்திருக்கிறார். தகுந்த நேரத்தில் மிகவும் விரைவாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட மருத்துவக் குழுவினரின் பொறுப்பான கடமையுணர்வினால் தனது மனைவியும் பிள்ளையும் காப்பாற்றப்பட்டதாக கணவன் நன்றி தெரிவித்து ஒரு பதிவிட்டிருக்கிறார்.

**தாத்தா :** நல்ல செய்தி. உதைப்பற்றி நேற்றைக்கு வாசிகசாலையிலை டீஎஸ் ஒபிசிலை வேலைசெய்யிற தம்பியும் கதைச்சவர். உவர் மாதிரிக் கன டாக்குத்தர்மார் செய்யிறவையாம். அதுக்குள்ளை ஓரிரண்டு பேர் பிழைவிடுகிறதாலை அதைத் தூக்கி வைச்சுக்கொண்டு தாழிக்கிறதுதான் எங்கடை ஒருசிலற்றை வேலை. அதாலை ஆஸ்பத்திருக்குக் கெட்ட பேர். சரி வேறை என்ன செய்தி இருக்கு?

**பேத்தி:** பல்கலைக்கழக பொறியியல் பீடத்திலை உள்ள செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்தைப் பற்றின ஒரு செய்தி. அவை கை அல்லது கால்களை இழந்தவர்களை இந்தியாவுக்குக் கூட்டிக் கொண்டுபோய் செயற்கை அங்க அவயவங்களை இலவசமாகப் பொருத்திக் குடுக்கினமாம். அது அவ்வளவு தரமானதில்லை எண்ட ஒரு குறை பற்றிப் பயனாளிகள் சொன்னவையாம். அதைப் பற்றி பேப்பரிலை வந்த ஒரு செய்தியை ஒருத்தர் படம் எடுத்துப் போட்டிருக்கிறார்.

**தாத்தா :** ஓம்! அதைப் பற்றியும் வாசிகசாலையிலை கதைச்சவை. உப்பிடிக் கன திட்டங்கள் அதைப் புரஜெக்ட் எண்டு சொல்லுறது. அப்பிடி நடக்கிற திட்டங்களிலை நன்மையும் நடக்கும். தீமையும் நடக்கும்.நன்மை எண்ட போர்வையிலை அதிலை பசியாறுறவையும் இருக்கினம். அப்பிடி எடுத்த திட்டங்களிலை ஒண்டும் நடக்காமல் நடக்கிற மாதிரிப் படங்காட்டிறவையும் இருக்கினம். அதைப் பற்றி அந்த டீஎஸ் ஒபிஸ் தம்பியோடை கதைச்சனான். அவனுக்கு உதைப் பற்றி நல்லாத் தெரியும்.

அவன் சொன்னான் "அண்ணை உதைப்போலை கனக்க நடக்கிது. 2009 சண்டை முடிஞ்சாப் பிறகு தமிழ் சனத்தைத் தூக்கி நிறுத்தப்போறம் எண்டு கன நிறுவனங்கள் வெளிக்கிட்டவை. அதிலை கனக்கக் காணாமற் போட்டுதுகள். இப்ப கொஞ்சப் பேர் அதுமாதிரி திட்ட அறிக்கைகளை எழுதிச் செல்வாக்கைப் பாவிச்சுக் காசை எடுத்துத் தங்களுக்கு வசதியா வேலை செய்திட்டுப் போயினமாம். அது மாதிரி உங்கடை கம்பஸிலையும் கன திட்டங்கள் ஓடுது எண்டு கேள்வி. அதுகளுக்குள்ளையும் பல கசமுசாவம்.

**பேத்தி :** தாத்தா. நான் யுனியிலைதான் படிக்கிறன். நீங்கள் சொல்லுறமாதிரி அங்கை அப்பிடி நடக்க வாய்ப்பில்லை. அவை செய்யிற திட்டத்தைக் குடுக்கிற நிறுவனங்கள் நல்லா ஆராய்ஞ்சு அறிஞ்சுதானே குடுப்பினம். அப்ப பிழைக்க வாய்ப்பில்லையே? அங்கை ஓடிற் இருக்கு. வெளியிலை இருந்தும் ஓடிற் வாறவை. என்னவோ எனக்கு நீங்கள் சொல்லுறது பிழையான தகவல் போலைத் தெரியிது.

**தாத்தா :** உது தான் உன்னைப் பேசுறனான். வெளுத்ததெல்லாம் பால் எண்டு நினைக்கிறது. அதைச் சொன்னவன் ஒரு என்ஜிஓ மனேஜர். அவன் ஒரு அதிகாரி. அவன் தான் வடிவா அறிஞ்சவனாம். ஓடிற்றுக்கு என்ன வேணும்? பைலுகள் ஒழுங்கா இருக்கவேணும். சரியாக கணக்கைக் காட்டவேணும். கணக்குக் காட்டுறதிலை எங்கடை ஆக்கள் விண்ணன்கள் எண்டு உனக்குத் தெரியாதோ?

**பேத்தி :** ஓம் தாத்தா. நான் நீங்கள் சொல்லுறதைப் பிழை எண்டு சொல்ல வரேல்லை. ஆனால் உதைப் பற்றி அறியேலாதோ? அறிஞ்சு யுனி மனேஜ்மென்ருக்கு அறிவிச்சு நடவடிக்கை எடுக்கேலாதோ?

**தாத்தா :** உதைக் கட்டுப்படுத்தப் பல வழியள் இருக்கு. இப்ப அரசாங்கம் கிளின் ஸ்ரீலங்கா எண்ட ஒரு செயற்றிட்டத்திலை உதைத்தான் செய்யிது. அதிகாரியள் எண்ட

> **வெளுத்ததெல்லாம் பால் எண்டு நினைக்கிறது. அதைச் சொன்னவன் ஒரு என்ஜிஓ மனேஜர். அவன் ஒரு அதிகாரி. அவன் தான் வடிவா அறிஞ்சவனாம். ஓடிற்றுக்கு என்ன வேணும்? பைலுகள் ஒழுங்கா இருக்க வேணும். சரியாக கணக்கைக் காட்ட வேணும். கணக்குக் காட்டுறதிலை எங்கடை ஆக்கள் விண்ணன்கள் எண்டு உனக்குத் தெரியாதோ?**

போர்வையிலை இருக்கிற உப்படியான கள்ளரைப் பிடிக்கிறதுதானே அவங்கடை வேலை. அதை அறிய தகவல் அறியும் சட்ட மூலம் இருக்கு. அதை ஆர்.ரீ.ஐ. எண்டு சொல்லுறது. அதுக்குரிய அதிகாரியள் உங்கடை யூனிவேசிட்டியிலையும் இருக்கினம். உங்கடை பல்கலைக்கழக மாணவர் சங்கத்திட்டைச் சொல்லி உடனை அதைச் செய்யச் சொல்லு. அதுவும் உங்கடை சங்கத்தின்ரை பொறுப்புகளிலை ஒண்டு. வாற ரிப்போட்டிலை பாத்தாத் தெரியும் என்ன நடந்தது? ஆர் அதுக்குப் பொறுப்பு? வேணுமெண்டால் அந்த ரிப்போட்டை வெளியிலை உள்ள "மாதாக்கள்" இருக்கிறாங்கள். அவங்களிட்டைக் குடுத்தால் அதுக்கை இருக்கிறதை அக்கு வேறா ஆணிவேறாச் சொல்லுவாங்கள். வேணுமெண்டால் ஆர்.ரி.ஐ. க்கு நீயும்போட்டு விவரத்தை அறியலாம். அதைக் கனபேர் ஏன் செய்யிறேல்லை . ஏனெண்டால் எங்களுக்கேன் சோலி எண்டு விட்டிடுகிறது.

**பேத்தி :** நான் யுனியிலை எங்கட சங்கத்தோடை கட்டாயம் [illegible] போட்டு வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

நான் அண்டைக்கிரவு சிவன்ரை வீட்டை போகேக்குள்ளைதான் முதன்முதலா குமுதினி ரீச்சரைப் பாத்தன். நல்ல வளந்த கறுவல் தொக்கை மனிசி. நல்ல வசீகரமான முகம். அதிலையும் கொஞ்சம் நீளமான கண்கள். மீன்விழி எண்டு சொல்லுவினமே அதுக்குப் பொருத்தமாயிருக்கும். சிவன் வீட்டுத் தலைவாசலிலை பாய் விரிச்சு அதிலை தான் அவ சக்கப்பணிய இருந்தா. அவவைச் சுத்தி முருகன், கண்ணன், சிவன் மூண்டு பேருமிருக்க, குமுதினி ரீச்சர் வலு கலகலப்பாய்க் கதை சொல்லிக்கொண்டிருந்தா. என்னைக் கண்டாப் போலை அவா கதைக்கிறதை விட்டுட்டு "ஆரிந்தத் தம்பி?" எண்டு சிவனிட்டைக் கேட்டா. அந்தளவு நேரமும் அவவையே பாத்துக்கொண்டிருந்த சிவன் அப்பத்தான் என்னைத் திரும்பிப் பாத்திட்டு "இவந்தான் ராகவன்!" எண்டு சொன்னான். அதைக் கேட்டுட்டு ஒரு வெகுளித்தனமான கவர்ச்சியான சிரிப்போட "இப்ப தம்பி ராகவனையும் நாங்கள் எங்களோட சேர்த்துக்கொள்ளுவம். வாங்கோ ராகவன்!" எண்டு அவா என்னை அழைச்சது எனக்கு நல்லாப் பிடிச்சுது. இதுவரைக்கு இப்பிடியொராள் என்னை வரவேற்றதை நான் காணேல்ல. முக்கியமா அந்த உளப்பாங்கு எனக்குப் பிடிச்சிருந்தது. நானும் அந்தக் குழாமில்சேர்ந்துகொண்டேன். அவா எங்களுக்குக் கதை கதையாச் சொல்லிக்கொண்டேயிருந்தா.

56

சிவன் தான் அவாவைக் கதை சொல்லச் சொல்லித் தூண்டிக்கொண்டிருந்தான். அண்டைக்கு அவாவும் சலிப்பில்லாமல் வலு கலகலப்பாய் பல கதையள் சொன்னா. அதிலை ஒண்டு மட்டும் ஞாபகமிருக்கு. அது 'உதயகீதம்' படத்தில கவுண்டமணி தேங்காய்க்குள்ளை வெடிகுண்டு இருக்கெண்டு புரளியைக் கிளப்பிவிடத் தொடர்ந்து நடக்கிற களேபரங்களைப்பற்றியது. அதிலயும்குமுதினி ரீச்சர் உசிலைமணி மாதிரி நடிச்சுக் காட்ட எல்லாரும் விழுந்து விழுந்து சிரிச்சம். உசிலைமணியின்ர மனிசி ஜக்குபாயாக நடிச்ச பிந்துக்கோசைப் போலயும் அவா நடிச்சுக் காட்டேக்குள்ளையும் ஒரே சிரிப்புத்தான். அப்ப எனக்கு 'உதயகீதம்' பாக்க வாய்ப்புக் கிடைக்கேல்ல. அந்தப் படம் வந்த காலத்தில ஊருக்குள்ளை அமோகமா ஓடிச்சுது. நானும் அந்தப் படத்தை எப்பிடியும் பாத்திடோணுமெண்டு ஓடித்திரிஞ்சன், சரிவரேல்ல. ஒருக்கால் ஊருக்குள்ளை ஒரேநேரத்தில இரண்டிடத்தில படமோடிச்சுது. முதலிடத்தில நான்படம்பாத்துக் கொண்டிருக்கேக்குள்ள ஊருக்குள்ள பெயர்பெற்றஒருதிரைப்படப்பிரியரான ஆழ்வாப்பிள்ளையண்ணை வந்து "மற்ற இடத்தில உதயகீதம் ஓடுது நான் ஏற்கெனவே பாத்த படம் எண்டதால விட்டுட்டு இஞ்சை வந்தனான்" எண்டுசொன்னார். அதைக்கேட்டாப்போலை எனக்கு இருப்புக் கொள்ளேல்ல. நைஸா எழும்பி மற்ற இடத்துக்கு ஓட்டமும் நடையுமாப் போனன். கைக்கெட்டினது வாய்க்கெட்டேல்ல எண்ட கதையாய் நானும் அங்கை போய்ச்சேரப் படமும் முடியுது. அதுக்குப் பிறகு ஒருக்கால் சிவராத்திரிக்குக் கனகரா வளவுப் பரமானந்தப் பிள்ளையார் கோயில்ல படமோட வெளிக்கிட்டினம். பிள்ளையார் திருவிளையாடல், திருவருட் செல்வர், சரஸ்வதி சபதம் எண்டு எல்லாம் பக்திப் படங்கள் போடுறதுக்கு தீர்மானிச்சினம். எங்கடை இளையண்ணா "எல்லாம் பக்திப்படங்கள் எண்டால் தொடர்ந்து பாக்க அலுப்படிக்கும். ஒரு படத்தையெண்டாலும் பக்தியில்லாத படமாய் எடுப்பம்" எண்டு கோயில்காறரிட்டைச் சொன்னான். வழமையாய் அயலிலை எங்கை படமோடுறதெண்டாலும் அவன்தான் நெல்லியடி சுப்பையா அன்சன்ஸில படக்கொப்பி எடுத்து வருவான். அதால சிவராத்திரிக்குப் படமோடுறதுக்கும் அவன்தான் படக்கொப்பி எடுத்து வரவேணும் எண்டதால அவன் சொன்னதுக்குக் கோயில்காரரும் ஓகே சொல்லிச்சினம். அவன் அண்டைக்கு ஓடுறதுக்கு எடுத்துவந்த பக்தியில்லாத படம் 'உதயகீதம்'.

(தொடரும்)

# ஞானம்

## போரின் கவிதை 40



தந்தையும் தாயும்
தனிமையின் நிழலைத் தாங்கி
தாய் மண்ணில் வாழ்கிறார்கள்.

காலத்தின் கதவோரம் சாய்ந்து,
ஒலியற்ற மௌனத்தில்
மறைந்த நினைவுகளை
மெல்ல மெல்ல மீட்டுகிறார்கள்.

அண்ணனும் நானும்
தாய்மண்ணை விட்டு
புலம்பெயர்ந்த பறவைகள்.

பிறந்த மண்ணில்
வேரூன்றி வாழும் ஆசை இருந்தும்,
வாழ்க்கை விதித்த
காயங்களும் கடமைகளும்
எம்மை வலி சுமக்க வைத்து,
மூடை கட்டி அனுப்பின.

இன்று மண்ணும் மனமும்
இடைவெளியில் தொலைந்து,
உணர்வுகள் மட்டும்
அதே மண்ணுக்குத்
திரும்பிச் செல்கின்றன.

வயோதிபப் பெற்றோருடன்
வாழவிடாத காலம் நெஞ்சுக்குள்
நிறைந்த வேதனை மொழிகளை
ஊமையாகத் தந்திருக்கிறது.
நினைவுகளைச் சுமந்து
சிந்தனைகளால் இணைந்து
தூர இருக்கும் பெற்றோருடன்
உறவாடும் ஊர்க்குருவிகள்.

எதையும் விட்டுவிடமுடியாமல்
இரண்டையும் பிடித்துகொண்டு
வாழ்வின் நீரோட்டத்தோடு
போராடிக்கொண்டு அங்குமிங்குமாய்
அங்கலாய்ப்பவர்கள்....
தாய்மடியின் மூச்சும்,
தந்தை கைப்பிடியின் வெப்பமும்
தேடி அழும் சாமக்குருவிகள்.

ஊருக்கு வந்தால்
நினைவுகள் மீள வரும்
கனவுகள் அழியும் ..
மனம் வலிக்கும்..
அழிந்து போன மனிதர்களுக்காக
அழுது நீர் சொரியும்.

என் நினைவுகளுக்குள்
நித்தம் நித்தம் வந்து
ஊரின் ஞாபகங்களோடு

அழிந்து போகாமல் அப்படியே
படமாக ஓடும் கதை
முப்பது வருடங்களுக்கு
முந்திய கதை!

அன்று
வானம் அமைதியாக இருந்தது
ஆர்ப்பாட்டமில்லா பூமி
திரும்பி வந்தவர்களிடம்
கதை கேட்டுக்கொண்டிருந்தது
சாவின் முடிவிலிருந்து
தப்பிவந்தவர்கள்
வாழ்வைத்தொடங்க
தயாராக இருந்த தருணங்கள்.
நிம்மதி மூச்சின் வழியாக
வெளியேறிக்கொண்டிருந்தது.

பொதுக்கிணறு
எங்கள் அயலவர்களை
ஒன்றாய் இணைத்த பாலம்...
பயமறியாத நாள்கள்
கதைகள் சலசலத்தன
நகைச்சுவைகள் பொழிந்தன.

கிணற்றடிச் சிரிப்பில்
வாழ்க்கை இசை கேட்டு,
துலாவில் நீர் மொண்டு
குளித்த மறக்கமுடியாத
இளமைக்கால நினைவுகள்.

இடம்பெயர்ந்து மீண்டு வந்தபோது
அதே சுதந்திரத்தின் வாசம்,
அதே நெருக்கத்தின் எதிர்பார்ப்பு
இதயத்தில் அடங்காமல் எழுந்தன.

நாம் இன்னும் நாம் தான்
என்ற மாசில்லா எண்ணத்தில்
நீர் மொண்டு குளித்தோம்.
எவரின் கவனத்தையும்
சிதற விடாமல்,
பொதுக்கிணறு எங்களது
கற்பைக்காக்கும்
கோவிலாக இருந்தது.

அன்று ஒரு நாள்

வாளி மொண்டு ஊற்றி,
அடுத்த வாளி அள்ளத் திடீர் அதிர்வாய்
எழுந்த
அவலக்குரல் அந்த ஓசை
அடி வயிற்றை பதற வைத்தது.
ஏதோ கனமான உணர்வு

நெஞ்சை நெரித்து
உடலின் உள்ளே கீழிறங்கி
உறைந்து நின்றது.

மிகப் பெரிய பாரவூர்தி

வேலியின் மேலால்
அது கருங்கோட்டை
போல உயர்ந்திருந்தது.
புரியாத பயம்,
ஆனால் எங்கோ ஏதோ
கொடூரம் நடக்க இருக்கும்
திடீர் உணர்வு
இதயத்தைக் கௌவிப்பிடித்தது.

முகமூடி அணிந்த தலையாட்டிகள்
அந்த பகல் வெளிச்சத்தில்
மரண தூதுவர்களாகத் தெரிந்தார்கள்.
அவர்களின் உணர்ச்சிகளையும்
எதிர்வினைகளையும்
முழுவதும் மறைத்ததால்,
அவர்கள் மனிதர்களாக இல்லாமல்
நிழல் உருவங்களாய் தோன்றினார்கள்.

காற்று நின்றது போலவும்,
பகல் அழுவது போலவும்
அந்த நொடிக்கான
அமைதியும் கத்தல் கலந்த அச்சமும்
என்னை முழுவதும் விழுங்கியது.

சில நொடிகள்...
இதயம் துடிப்பையே மறந்தது.
தனிமையில் நின்ற என் மனம்
சிதறிய எண்ணங்களைத்
தாங்க முடியாமல்
அலைபாய்ந்தது.

அழுகுரல் வந்த திசையை
துடித்த கண்களால் தேடினேன்
இதே கிணற்றில் தண்ணீர் எடுத்து
சிரிப்புகள் கொண்டாடிய வீடு...
இன்று வலியின் சுமையில்
முற்றிலும் நொருங்கி
ஆகாயமே உடையும் அளவுக்கு
அழுகையைத் தள்ளியது.

அந்த நொடியே
எப்படியோ ஒரு தைரியம்
என் உடலுக்குள் மின்னல் .

ஈர உடையுடன்
அந்த உயரமான
கற்குவியல்களைத் தாண்டி
உறைந்த காற்றை கிழித்து
வீதியை தாண்டிப் பாய்ந்தேன்.
ஒரு வீட்டின் வாசலில்
துடித்த குரலில் கத்தினேன்
யாரும் திறக்கவில்லை.
வீதிக்கதவும் பூட்டப்பட்டது.
வீட்டுக்கதவும் மூடப்பட்டது.

கண்ணீர் உருக்கமாக வழிந்து
கேட்டுக் கெஞ்சினேன்...
'வீட்டைத் திறவுங்கள்
பயமாக இருக்கிறது'!

ஒரு பெண்ணாக
ஈர உடையுடன்

தனியாக நின்ற உணர்வு
பிடித்துவிட்டால்?
விசாரணை வந்தால்?
அடையாளப்படுத்த யாரும் இல்லை...
பயம் என் கழுத்தை நெரித்தது.
காதுகள் கூர்மையாய்,
ஒவ்வொரு சத்தமும்
கொடூரமாகத் தோன்றியது.

இதற்கு அப்பால் வழியில்லையே?
மதில் தாண்டி
கற்குவியல் மீது அடி வைத்து
கைகள் நடுங்கினாலும்
இதயம் தள்ளிச் சென்றது.
எப்போதும் வராத துணிவோடு

என் வீட்டுக்குள் நுழைந்து,
அடுப்படிப் புகைக்கூட்டின் அடியில்
இருண்ட மூலையில்
ஈர உடையோடு சுருண்டு விழுந்தேன்.
பயம் விழுங்கிக்கொண்டிருந்தது.
அந்த வீட்டு மகனை
தலையாட்டி கைநீட்டியிருக்கிறது

என் பெயரும், அவன் பெயரும்
ஒரே வார்த்தையில் தொடங்கும்.
அந்தச் சிறு ஒற்றுமை
விதியின் நூலில் சிக்கி
வாழ் நாள் முழுவதும் எனக்கு
மறக்க முடியாத வலியானது.

அமைதியான தோற்றம்...
சிறந்த ஆளுமை வெளிப்பாடு..
உடல்வாகு நேர்த்தியாக அமைந்த
ஒரு சாதாரண மாணவன்.
பல்கலைக்கழக அனுமதி பெற்று
எதிர்காலத்தைக் கனவு கண்டவன்.
என்னை விட ஒரு வயது மூத்தவன்.

ஒரு இருண்ட பகலில்
இழுத்துச் சென்றார்கள்.
பத்து நாட்கள்...
மரணவீடாக ஓலம்....
இராணுவ முகாம்களில் காவல் காத்து
சகோதரர்கள் தேடி மீட்டனர்
விடுதலையின் பின் மூன்று நாட்கள்
வலி ,வலிப்பாகி உடலை விழுங்கி
இறுதியில் உயிரை எடுத்தது.

சகோதரர்களின்அழுகை
இன்றுவரை என் நினைவின் உள்ளே
ஒலித்துக்கொண்டே இருக்கிறது.
அந்த மாணவனின் பெயரை
உச்சரித்தவர்கள்
என்னைக் கைகாட்டியிருந்தால்?
இருவருடைய பெயர்களும்
மாறிமாறி உச்சரிக்கப்பட்டன...
ஆனால் விதி அங்கு கைகாட்டியது!

அந்த மறக்கமுடியாத
தருணங்களை மனதில் சுமந்து
முப்பது வருடங்கள்
வாழ்ந்து முடித்தலும்..
நினைவுகள் அழியாது
நிலையாகி என் பெயரோடு
ஒட்டி வாழ்கிறது.
ஊருக்குச் செல்லும் போதெல்லாம்
அந்த நாள் நினைவுகள்
உதிரம் நடுங்கும் அளவுக்கு
என் மனதை நெரித்துப் போகின்றன.

சிறுவனாக இருந்து
இளைஞனாகும் வரை உறவாடிய
ஒரு இளைஞனின் உயிரை
சாட்சியாக நின்று
காப்பாற்றமுடியாத வலியில்
கிணறு தூர்ந்து போய்க்கிடக்கிறது .

அது பார்த்த வலியின் தடங்களோ
இன்று அதன் கரைகளில்
வரலாற்றுப் பதிவுகளாய்
காயமாக ஒட்டியிருக்கின்றன.
இப்போதும் அதே அமைதியில்.

அருகில் வர யாரும் இல்லாததால்
அது ஒரு தொலைந்துபோன

நினைவு போலவும்,
வலி விழுங்கிய இடத்தில்
மனிதர்கள் அருகில் வர விரும்பாத
ஒரு வெறுமைத் தளமாகவும்
மாறிப் போயிருக்கிறது
எங்கள் பொதுக்கிணறு!

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை நேரத்தை நீடிப்பது நல்லதே!



ந.பரமேஸ்வரன்

குரு என்றால் இருளை அகற்றி ஒளியை ஏற்றுபவன் என்று பொருள். அது ஆன்மீகக் குருவாகவும் இருக்கலாம், கல்வி ஒளியை ஏற்றும் குருவாகவும் இருக்கலாம். மாதா,பிதா,குரு, தெய்வம் என்றுதான் மாணவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. குரு என்ற சொல்லுக்கு உதாரணமாக இப்போது எத்தனை ஆசிரியர்கள் விளங்குகின்றனர்? (உண்மையிலேயே அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்கள் மன்னித்துக்கொள்ளவும்.)

ஆசிரியர்களின் நலன்களைப் பேணிக் கொள்வதாகக்கூறிக்கொள்ளும் சங்கங்கள் யாவும் எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற ரீதியில் பிணந்தின்னிக்கழுகுகளாகவே செயற்பட்டுவருகின்றன. இவர்களுக்கு மாணவர்களின் நலன்களிலோ, நாட்டு நலனிலோ எதுவித அக்கறையும் இல்லை. யார் எக்கேடு கெட்டாலென்ன தாங்கள் மட்டும் சுகபோகம் அனுபவித்தால் போதும் என்ற ரீதியிலேயே ஆசிரிய தொழிற்சங்கங்கள் செயற்பட்டுவருகின்றன.

பிரதமர் ஹரிணி அமரசூரியா கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு திட்டங்களை வகுத்து செயற்படுத்த முனைந்துவருகிறார். பிரதமரின் திட்டங்களை முறியடிக்கும் நடவடிக்கைகளில் சுயநலப்பிசாசுகளான சில ஆசிரிய தொழிற்சங்கங்கள் களமிறங்கியுள்ளன.

பாடசாலை நேரத்தை 30 நிமிடத்தால் அதிகரிக்கப்போவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். இதற்கு இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் "அரசாங்கம் கூறுவது போல் அடிமைகளாகச் செயற்படுவதற்கு நாங்கள் தயாரில்லை" என சூளுரைத்துள்ளார்.

இலங்கையில் சேவையிலீடுபட்டுள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த அனைத்து அரச உத்தியோகத்தர்களும் மருத்துவர்கள்,பொறியியலாளர்கள்,நிர்வாகசேவை அதிகாரிகள், விரிவுரையாளர்கள் தினமும் எட்டு மணித்தியாலங்கள் கடமையிலீடுபடும்போது ஆசிரியர்கள் மட்டும் ஆறு மணித்தியாலங்களே கடமையாற்றுகின்றனர்.உண்மையில் சொல்லப்போனால் இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல். ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்படும் அநீதி. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த பாரபட்சமான செயற்பாட்டுக்கு எதிராக ஏனைய அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யவேண்டும்.

ஆசிரியர்களுக்கு அரசாங்கமே சம்பளம் வழங்குகிறது. சம்பளம் வழங்கும் அரசாங்கம் 30 நிமிடம் கூடுதலாக வேலை செய்யச்சொன்னால் அடிமைப்படுத்துவதாக அர்த்தமா? முதலில் ஜோசப் ஸ்டாலின் அடிமை என்ற சொல்லின் அர்த்தத்தை அகராதியில் பார்த்துத் தெரிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பது நல்லது.

பாடசாலை நேரத்தை 1980களில் இருந்தது போன்று இருநேரமாக 8.30 தொடக்கம் 3.30 என மாற்றினால் மட்டுமே நாடு முன்னேறமுடியும்.

இலங்கையில் 43.4% மாணவர்களிடையே போஷாக்குக் குறைபாடு காணப்படுவதாக சுகாதாரத் திணைக்கள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. யாருக்காவது சந்தேகமிருப்பின் சுகாதார அமைச்சின் இணையத்தளத்திலோ யுனிசெப் அறிக்கையிலேயோ புள்ளிவிபரங்களைப் பார்வையிடலாம். கிளிநொச்சி ,அம்பாறை போன்ற தமிழ்மாவட்டங்களிலேயே போஷாக்கின்மை கூடுதலாகக் காணப்படுகிறது.

இதற்கு அடிப்படைக்காரணம் 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதே. காலையில் 'பேஸ்ரியுடன்' அல்லது ' பணிசுடன்' பாடசாலை செல்லும் பிள்ளைகள் மதியமும் அதே போல் 'ரோல்ஸுடன்' அல்லது பற்றீசுடன் தான் பொழுதைக் கழிக்கின்றனர். ஆசிரியர்களும் அதிபர்களும் அதிகாலையிலேயே எழுந்து தமது பிள்ளைகளுக்கு சத்துணவு சமைத்துக் கொடுக்கிறார்களோ எனக்குத் தெரியாது. ஆசிரியர்கள் இப்போது வரி செலுத்தும் உத்தியோகத்தர்களாக மாறியுள்ளமையால் அவர்களது சமையல்காரர்கள் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு சத்துணவு சமைத்து வழங்குகிறார்களோ தெரியவில்லை.

> பாடசாலை நேரத்தை 1980 களில் இருந்தது போன்று இருநேரமாக 8.30 தொடக்கம் 3.30 என மாற்றினால் மட்டுமே நாடு முன்னேற முடியும்.

கிராமப்புறங்களிலிருந்து காலை 6.30 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்படும் மாணவர்கள் பாடசாலை முடிந்ததும் நேரே ரியூசனுக்கு செல்கின்றனர்.ரியூசன் முடிந்து இரவு 8.00 மணிக்குப்பின்னரே வீடு திரும்புகின்றனர்.யாழ்ப்பாணத்து நிலைமை இதுதான். காலை 6.45 மணிக்கு கிராமப்புறங்களில் பஸ்ஸுக்கு காவல் நிற்கும் மாணவர்களைத் தாராளமாக காணலாம்.அதே போல் இரவு 7.30 மணிக்கு காங்கேசன்துறை வீதியிலும் பலாலி வீதியிலும் பஸ்ஸுக்கு காவல் நிற்கும் மாணவர்களையும் காணலாம்.இரவு தான் அவர்களால் ஒழுங்காக சாப்பிடமுடிகிறது.போஷாக்கற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதால் நாட்டுக்கோ வீட்டுக்கோ எதுவித பிரயோசனமுமில்லை. பாடசாலைகள் 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதால்

ஆசிரியர்களும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக வன்னியில் கடமையாற்றும் ஆசிரியர்களின் அவலங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. யாழ்ப்பாண கிராமப்புறங்களிலிருந்து வன்னி செல்லும் ஆசிரியைகள் அதிகாலை 3.45 மணிக்கே எழுந்து கணவனினதும் பிள்ளைகளினதும் பணிவிடைகளை முடித்துக்கொண்டு 5.15 மணிக்கு யாழ்ப்பாணம் வருவதற்கு பஸ் ஏறுகின்றனர். இவர்களில் சிலர் தலையிலிருந்து ஈரம் சொட்டச்சொட்ட காலை வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் நெடுந்தூர பஸ்களில் பயணம் செய்வதையும் காணலாம். ஜோசப் ஸ்டாலினுக்கும் மணிக்கூட்டை பார்த்து கேற்றை பூட்டும் அதிபர்களுக்கும் இவர்களது துன்பங்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி செல்லும் ஆசிரியர்களின் அவலங்கள் ஒருபுறமிருக்க வன்னி சென்று கடமையாற்றும் ஆசிரியர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு பாட நேரம் முடிவடைந்த பின்னர் கடமைக்குச் சமுகமளிப்பதால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர் குற்றம் சுமத்துகின்றனர். வன்னியில் தங்கியிருந்து கடமையாற்றும் ஆசிரியர்களும் வெள்ளிக்கிழமைகளில் கடமை நேரம் முடிவடைய முன்னரே புறப்பட்டு விடுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது

நாட்டைப்பற்றியோ மக்களைப்பற்றியோ எதுவித சிந்தனையுமின்றி கோத்தாவின் கழுத்தைப்பிடித்து நெரித்து சம்பள நிலுவையைப் பெற்றதால், நாட்டில் வரிசை யுகம் தோன்றுவதற்கும் காரணமாயிருந்தவர் ஜோசப் ஸ்டாலின் தான். அதேபோல் அண்மையில் பரீட்சை விடைத்தாள் திருத்துவதற்கும் கழுத்தைப்பிடித்து நெரித்து அதற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட பின்னர் தான் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டார்கள்.

எனவே இனியாவது ஆசிரிய தொழிற்சங்கங்களும் அதிபர்கள் சங்கங்களும் நாட்டுநலன் சார்ந்து சிந்திப்பார்களா?


பிரதமரின் யோசனைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி பாடசாலை நேரத்தை மீண்டும் இருநேர பாடசாலைகளாக மாற்றி ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரினதும் கடமை.

## மாணவப் பருவம்

மாணவப் பருவம்- அது
ஒரு அழகிய மலர்ப் பூங்கா!

பள்ளி என்னும் பூங்காவில்
கல்வி என்னும் மலர்
மலர்ந்து அறிவு என்னும்
மணம் பரப்பி நிற்கின்ற
எழிற்கோலம்...!

தென்றல் அது வீசிடவே
மணம் பரப்பும் மலர்களைப்
போல் கல்வி என்னும்
செல்வம் பெற்று......
உயர்வடையும் பருவம் அது!



திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம் - முகமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org